பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 1	ஞாயிறு 25-12-38 வெகுதான்யஹூ மார்கழிமீ 10உ	முத்து 13

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
1. அதே பழைய பழுதைக் கயிறுதானா?	....	293
2. குறிப்பு	...	301
3. போகிற போக்கில்	...	302
4. வாரச் செய்திகள்	...	304
5. பாங்கிகளும் செல்வப்பெருக்கும் (பாலு)	....	305
6. கிராமக் காற்று (ஸ்ரீ. சுத்தானந்த பாரதி)	...	309
7. ஹரிஜனங்களின் மனப்பான்மை (ஸ்ரீ. வே. கேசவலு)	...	311
8. டாக்டரின் மனைவி (ஸ்ரீ. ஸ்ரூ. சேதுராமன்)	...	313
9. புதுக்குடி வாழ்க்கை (ஸ்ரீமதி. சேது அம்மாள்)	...	317
10. கைதட்டல் (ஸ்ரீ. என். சிதம்பரசுப்ரமண்யன்)	...	320
11. சுகாதாரம் (டாக்டர். டி. எஸ். ரமணி)	...	322
12. ஸர் சி. வி. ராமன் ஒளி (ஸ்ரீ. ஆர். கே. விசுவனாதன் பி.ஏ. (ஆனர்ஸ்))	...	324
13. வலை வீச்சு	...	326
14. சினிமாப் பக்கம்	...	328

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



அதே பழைய பழுதைக் கயிறுதானு?

நமது வைஸ்ராய் லார்ட் லின்லித்கோ பாடுபட்டுக் கடல் கடந்து சீமைக்குப் போய் மறுபடியும் அதே பழுதைக் கயிற்றைத்தானு கொண்டுவந்திருக்கிறுர்! அவர் சமஷ்டியைப்பற்றி கல்கத்தாவில் செய்த பிரசங்கத்தை வாசிக்க நமது மனம் ஏக்கமடைகிறது. வீண் போராட்டமும், சச்சரவுமில்லாமல், சமாதானமாகவே மாகாண சுய ஆட்சியை அடைந்ததுபோல் சமஷ்டியின் காரியமும் முடிந்துவிட வேண்டுமென்று ஏழுமலையானை வேண்டிக் கொண்டிருந்தோம்.

ஆனுல் இதற்கு பிரிட்டிஷ் மந்திரி சபையும் இந்தியா மந்திரியும் இணங்கவில்லையென்று தெரிகிறது. வைஸ்ராய் தன்னுல் கூடியமட்டில் ஏதாவது கொஞ்சம் காங்கிரஸிற்குக் கைகாட்டவேண்டுமென்று சொல்லியிருப்பாரென்றே நாம் நினைக்கிறோம். அந்த சொல்ப வார்த்தைகள்கூட எள்ளளவும் ஏறவில்லையென்று இப்பொழுது தெளிவாய்த் தெரிகிறது. நாம் எதிர்பார்த்தபடியே வெறும் கையோடு வைஸ்ராய் திரும்பி வந்திருக்கிறுர். அவர் பிரசங்கத்தில் ஓர் ஏக்கக் குரலையும், கவலையையும், மனத் தேக்கத்யும், பளுவையும் நாம் காண்கிறோம்—தோற்கும் கேசை சீனியர் வக்கீல்கள் சாமர்த்தியமாய் பேசிப் பார்ப்பதுபோல்! சில ஜட்ஜுகளிடம் ஜயித்தும் விடுகிறதே!

உண்மையில் நமக்கு ஒரு ஏமாற்றமும் இதில் கிடையாது. கோமகன் வின்ஸர் சிம்மாசனத்தை விட்டு விலகியது முதற்கொண்டு பிரிட்டிஷ் மந்திரி சபையின் ஹிருதயம் (நெவில் சேம்பர்லின், சர் சாம்யூல் ஹோர், லார்ட் இர்வின், "லண்டன் டைம்ஸ்") பாஸிஸ்டாக அதிசீக்கிரம் மாறிக்கொண்டு வருகிறது. பிரிட்டிஷ் ஜனநாயகத்தின் கொள்கை இதை ஆமோதிக்கிறதா என்று அடுத்த தேர்தலில்தான் தெரியும். நெவில் சேம்பர்லின் பிரதம மந்திரியாய் வந்தபிறகு ஜனநாயகத்தின் பிரதம கொள்கைகள் வாடி வதங்கி, ஒடுங்கிக்கொண்டே வருகின்றன. இச் சமயத்தில் நமது வைஸ்ராய் 1935-ம் வருஷ இந்தியா சட்டத்தில் பெடரல் பாகத்தில் சில சீர்திருத்தங்கள் கொண்டுவரலாமென்று எண்ணினுலும் நடக்குமா? தவிர ஐரோப்பா முழுவதும் யுத்தக் குழப்பத்தில் முழுகி நிற்கிறது. இந்த சமயத்திலா நம்முடைய கழுத்தில் அவர்கள் போட்டிருக்கும் பிடியைக் கொஞ்சம் தளர்த்திக் கொள்வார்கள்?

மத்திய ராஜாங்கத்தில் சுய ஆட்சி நமக்கு இல்லையென்றுல் மாகாண சுய ஆட்சியின கௌரவமென்ன, சக்தியென்ன? ஜில்லா கலெக்டரின் ஆட்சிக்கு எவ்வளவு சுவாதீனமும், சுதந்திரமும், கௌரவமும் உண்டோ அவ்வளவுதானே இப்பொழுது மாகாண ஆட்சிக்கு உண்டு? கையை விலங்கிட்டால் விரல்களுக்கு எவ்வளவு சுவாதந்தரியங்கள் உண்டென்று உங்களுக்கு நன்றுய் தெரியும். எட்டினவரையில் விரல்களைத் துளாவிப் பார்க்கலாம். வாய் வரையில் தாராளமாய் அன்னத்தைக் கொண்டு போய் செலுத்த முடியுமா? முடியாது. நாளடைவில் சோர்ந்து வாடி பட்டினி கிடந்து சாகவேண்டியதுதான். இதை லார்ட் லின்லித்கோ அறியவில்லையா?

இந்தக் கஷ்ட நேரத்தில் காங்கிரஸின் கடமை தெளிவாக நிற்கிறது. இனிமேல் இந்தச் சீர்திருத்தம் வேண்டும், அந்தச் சீர்திருத்தம் வேண்டுமென்று குறிப்பிட்டு முறையிட்டு வாயால் கேட்பதில் கொஞ்சமேனும் பயனில்லை. திரிபுரியில் கூடும் காங்கிரஸில் ஓர் தீர்மானத்திற்கு வந்து, நாமே ஒரு அரசியல் அமைப்பு சபை ('கான்ஸிடிடுவென்ட் அசெம்பிளி'யை) சீரான வழியில் நிர்மாணம் செய்து அந்த அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். அப்படி நாம் நடத்திக் காட்டினுல்தான், வேறு

வழியில்லையென்று பிரிட்டிஷ் மந்திரிசபை தெரிந்துகொண்டு, இதை அவர்களே அங்கீகரிப்பார்கள். கட்டிடத்தைக்கட்டி பூர்த்தி செய்துவிட்டால் நட்டிருந்த கழிகளையும் சாரப் பலகைகளையும் தானே அவிழ்த்துக் கொண்டு போகிறார்கள்.

பெடரல் அரசியல்திட்டம் போடுவதில் முக்கியமாய் நாம் கவனிக்க வேண்டியவைகள் சில உள. என் அபிப்பிராயத்தில் சுதேச சமஸ்தானங்களையும் பிரிட்டிஷ் இந்தியாவையும் ஏறத்தாழ சமநிலையில் பூட்டி பெடரல் வேலை ஆரம்பிப்பது இன்றியமையாதது. அவசியமான முதல் சீர்திருத்தம். இதன்னியில் நமது தேசம் ஒருநாளும் முன்னேற்ற மடையாது. வலதுகண் வேணுமா, இடதுகண் வேணுமாவென்று கேட்டால் இரண்டும்தான் வேண்டும். காது வேணுமா, கண் வேண்டுமாவென்று கேட்டால் இரண்டும்தான் வேண்டுமென்று பதில் கூறுவோம்.

தவிர, எருமை மாட்டையும், பசு மாட்டையும் ஒரே ஏரில் கட்டினால் உழவாகுமா? ஒத்து இழுக்கவேண்டாமா? இரண்டு ஏராயிருந்தாலும் பாதகமில்லை. எருமைக் கிடாக்களை ஒன்றிலும் காளைகளை மற்றொன்றிலும் பூட்டி, நமது வைஸ்ராய் நயந்து சொல்லுகிறாரேயென்று, பார்க்கலாம். அப்பொழுதும் உழவு சரியாக ஆகாது. உள் அந்தரங்கத்தில் லார்ட் லின்லித்கோ இதை நன்றாய் அறிகிறார். ஆனால் உழவைப்பற்றி அவருக்குக் கவலையில்லை. பிரிட்டிஷ் ராஜாங்கத்திற்கு இந்தியாவில் மேல்வார ஜமீந்தார் பாத்தியம்தானே! குடிவாரம்தார் எக்கேடு கெட்டுபோனால் என்ன? வரிதானே வேண்டியது. அதற்கு விளையாமல் போகிறதா—உழுதாலென்ன, உழாவிட்டால் என்ன?

அரிசியையும் கோதுமையையும் ஒரே சட்டியில் போட்டு சமைக்க முடியுமா—விருந்தாளிக்கு காலத்தில் சோறு போடவேணுமென்கிற எண்ணம் உண்மையிலிருந்தால்? சம்பாவுடன் காட்டு வாணனையாவது கலக்க வேண்டாமா? கோதுமை, சோளம், கம்பு, கேழ்வரகு போன்ற வேறு தான்யங்களை அரிசியுடன் கலந்தால் காரியமாகுமா? கலத்துக்கு அன்னமாகுமா? பண்டம் நஷ்டம் தானே!

பாவும் உண்டையும் ஒரே நம்பர் நூலாய் ஒத்திருந்தால்தானே நெசவு நயமாயிருக்கும்? அரசியல் தறியிலும் நெசவு இப்படியேதான். 60-வது நம்பருக்கு குறைந்தபக்ஷம் 40-வது நம்பராவது போடவேண்டும். இல்லாவிட்டால் முழு மோசடிதான்.

உபமானங்கள் போதும். சுதேச சமஸ்தானங்களுக்கும் பிரிட்டிஷ் மாகாணங்களுக்கும் ஒருவித ஒற்றுமை, அரசியல் மார்க்கத்திலும் திட்டத்திலும், இந்தப் பாரதநாட்டில்ராமேசுவரம் முதற்கொண்டு ஹிருஷீகேசம் வரை, அவசியம் வேண்டும். ஜனநாயகம் வேண்டும். மனமொப்பி இருவரும் ஒத்து, விட்டுக்கொடுத்து இழுக்க வேண்டும். உழைக்க வேண்டும்.

சரியானபடி காமக்ரோத மன்னியில் ஒன்று கூடிச் சேர்ந்து நாம் நமது ராஜாக்களைக் கேட்டுக் கொண்டோமேயானால் அவர்கள் தங்களுக்குக் கிடைத்திருக்கும் பல அரசியல் உரிமைகளைத் தாங்களே தாராளமாய் விட்டுச் கொடுக்க தயாராயிருக்கிறார்களென்று பல காலமாய் என் கருத்து. ஜப்பான் தேசத்து அமராய்கள் தாங்கள் உயர்ந்த உரிமைகளைத் தியாகம் செய்தல்லவோ ஜப்பான் இந்த உயர்ந்த ஸ்திதிக்கு வந்திருக்கிறது. தவிர நமது ராஜாக்கள் தங்கள் பிரஜைகளின் முன்னேற்றத்தையே உத்தேசித்தும் தங்கள் முன்னேற்றத்தை உத்தேசித்தும் இவ்விதம் விட்டுக் கொடுக்கவேண்டிய தவசியம். இப்படித் தியாகமும், ஒற்றுமையும் ஏற்பட்டால்தான் சமஷ்டியில் சரியான அரசியல் திட்டம் கொண்டுவர முடியும். தேசம் முன்னேற்றமடையும். இந்த உண்மையின் அவசியத்தை அறியாதவன் இந்தியப் பெடரல் அரசியலுக்கு கொஞ்சம்கூட லாயக்கில்லை.

இதர விஷயங்களிலும், பெடரல் அரசியல் திட்டம் சம்பந்தப்பட்ட வரையில் 1935-ம் வருஷத்திய இந்தியா சட்டம் ஒரு விதத்திலும் திருப்திகரமானது அல்ல. அது பொய் நெசவு. போலிக் கதர். அதில் இரட்டையாட்சி தொலைய வேண்டும். மத்திய ராஜாங்க வருமானத்

தில் மூன்றில் ஒரு பங்குகூட பெடரல் சட்டசபையின் தீர்மானத்திற்கு உட்பட்டதல்ல. ஜாடா வருமானத்தையையும் உட்படுத்த வேண்டும். ராணுவம் நமது கைக்குள் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அது என்ன சட்டசபை? வெறும் 'டிபேடிங்சொஸைடி' யாகத்தானே போய்விடும்? வீண் வாக்குவாதம் தானே மிச்சமாகும்? வகுப்பு வாதத்தில் மும்மரமாய் முடியும். சத்திரத்தில் சோரில்லை என்றால் சண்டைக்குக் கேட்கவேண்டுமா?

தவிர, பெடரல் சட்டசபைத் தேர்தலில் நேர்முகமற்ற தேர்தல் (Indirect election) கூடவே கூடாது. அன்னியர்கள் கொடுமைகளை சில சமயம் பொறுத்தாலும் பொறுக்கலாம். இதன் மூலம் விளையும் நம்மவர்களின் அட்டகாசத்தை சகிக்கவே முடியாது. இந்தத் தேர்தலும் அடியோடு போக வேண்டும்.

இன்னம் பலவிஷயங்கள் உள. சில்லரையாக "பாரதமணி" சொல்லிப் பிரயோஜனமில்லை. ஓர் 'கான்ஸ்டிடுவென்ட் அசெம்பிளி' தேர்ந்தெடுத்து, அந்தப்பாரத மணியின் ஓசையென்னவென்று அறிய வேண்டும். கைகும்பிட வேண்டும். இந்தப் பெரிய காரியத்தைச் சாந்தமாய் சண்டை சச்சரவு அன்னியில் நடத்தவேண்டும்.

மந்திரி பதவி மாகாணத்தில் ஒப்புக்கொண்டதற்கு முதற்காரணம் பெடரேஷனுக்கு வலு ஊட்டத்தானே? இதைக் காங்கிரஸ் பிரதம மந்திரிகள் மறந்துவிட்டார்களென்று நாம நம்பவில்லை. தற்காலம் 'பைலி'ல் முழுகியிருந்தாலும் சீக்கிரத்தில் கண் நிமிர்ந்து பார்ப்பார்களென்று நம்புகிறேன்.

என் மனதில் துக்கம் தேங்கி நிற்கிறது. ஐரோப்பா முழுவதும் கலகம். சண்டை சச்சரவு குழப்பம். இறுமாப்பு. மகா பாரத யுத்தம் போல் ஒன்று வரப்போகிறதென்று தோன்றுகிறது. இந்த கஷ்ட காலத்திலாவது, பிரிட்டனும் இந்தியாவும் ஒத்துழைத்து இந்தக் கொந்தளிக்கும் அரசியல் கடலில், இரண்டு தாய் மரங்களை சேர்த்துக் கட்டுமரமாகக் கட்டி நிலைநிறுத்துவார்களென்றே நினைத்தேன், வேண்டினேன், வைஸ்ராய் சீமைக்குப் பிரயாணம் கிளம்பினவுடன். ஏற்கனவே 1935-ல் போட்டுக் கட்டப்பட்டிருக்கும் அந்தப் பழுதைக் கயிறே நமது கட்டு மரத்திற்குப் போதுமென்று பிரிட்டிஷ் மந்திரி சபையும் இந்தியா மந்திரியும் சொல்லி, வைஸ்ராயைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள் போலிருக்கிறது. வைஸ்ராய் கொண்டு போனதே சணல்கயிறல்ல. மட்ட நார்க் கயிறுதான். அதைக்கூட ஒப்பமாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள்!

வரும் புயல்காற்றில் பழுதைக் கயிற்றால் கட்டப்பட்ட தாய் மரங்களிரண்டும் கொந்தளிக்கும் கடலில் விலகிப் போய் விடுமென்றே அஞ்சுகிறேன். ஒரே குழப்பமாய்த்தான் வருங்காலம் எனக்கு தோன்றுகிறது. ஆனால் இந்த குழப்பத்தில் ஈசனருளால் நமக்கு வழிகாட்ட மகாத்மா காந்தியே இருக்கிறார். நாம் அஹிம்ஸா தர்மத்தையே கைப்பிடித்து அஞ்சாமல் நடக்கவேண்டும். இல்லாவிட்டால் இந்திய சரித்திரத்திற்கும் நமது நாகரீகத்திற்கும் அழகேது? மேன்மையேது? மகாத்மா காந்தியையே தொடருவோம். அதற்கு வேண்டிய வழிகளை இப்பொழுதே தேடவேண்டும்.

வைஸ்ராய் கல்கத்தாவில் பேசின தினமே, மேனாட்டுப் பிரபல ஆசிரியரான எச். ஜி. வெல்ஸ், அவசரமாய் ஆஸ்டிரேலியா போகிற போக்கில், ஒரு வார்த்தையை நம்முடைய தர்மத்திற்கு விரோதமாயும் அலக்ஷியமாயும் சொல்லியிருக்கிறார். அதைக் கேட்டு நாம் அஞ்சவேண்டாம். நமது நாகரீகத்தின் உண்மையும் மேன்மையும் அவருக்கு நன்றாய்த் தெரியாது—சரித்திரமும், விஞ்ஞானமும் ஏராளமாய் படித்தவராயிருந்தாலும். வைக்கல் போரைக் கொளுத்தி வண்டி மைதேடி எடுத்துத் தன் சக்கரத்தை ஓட்டி வரும் வகுப்பைச் சேர்ந்த பண்டித ஆசிரியரில் அவர் பிரமுகர். அதற்கு அவருக்கு வந்தனம். ஆனால் நாம் சந்தனக் கட்டையிலிருந்து சந்தனாதி தைலத்தை இறக்கும் வழி தெரிந்த வைத்திய வம்சத்தைச் சேர்ந்தவர்கள். நமது தர்ம வாஸனைவழியே நாம் நடப்போம். நாம் ஷா, வெல்ஸ் தமாஷ் பேச்சைக் கேட்டுப் பயப்பட வேண்டாம். ராம கிருஷ்ணர், விவேகாநந்தர், காந்தி இவர்கள் காட்டும் பாதையே நமக்கு சன்மார்கம். அதையே நாம் பின்பற்றுவோம்.

கே. எஸ். வேங்கடரமணி.

குறிப்பு

பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் சிதையுமா?

சமீபத்தில் பிரிட்டிஷ் காலனிகள் மந்திரி ஸ்ரீ. மால்காம் மாக்டொனல்ட் வாய் தவறியோ அல்லது வேண்டுமென்றோ பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் எதிர்காலத்தைப் பற்றி அஸ்வாரஸ்யமாகச் சொல்லி விட்டார்; ஒரு வேளை தன் வேலைக் காலத்திற்குள்ளேயே அது சிதையவும் கூடும் என்று விட்டார். அவர் எப்படி அப்படிச் சொன்னார், சர்க்கார் மந்திரி இந்த மாதிரி பேசுவது சரியா என்றெல்லாம் காமன்ஸ் சபையில் ரகளைப்பட்டது. பிரதம மந்திரி நிரம்ப சாவதானமாக, தன் சகா சொன்னதில் ஒன்றும் பிசகில்லை யென்றும், அவர் சாம்ராஜ்யம் சிதையாது என்ற திட நம்பிக்கையுடன் தான் பேசினார் என்றும், மிகவும் அழகாகப் பேசிவிட்டார் என்றும் சப்பைகட்டிப் பேசினார். ஆனால் சாம்ராஜ்யம் சிதைவுறலாம் என்ற நினைப்பென்னவோ இருக்கத்தான் செய்கிறது.

சாம்ராஜ்யத்தின் சிதைவு வேறெந்தக் காரணத்தால் ஆனாலும் ஆகாவிட்டாலும் இந்தியாவினால் ஆகலாமென்ற பயத்தை வைஸ்ராய் கூட வெளியிட்டுச் சொல்லி இந்தியா எப்படியாவது பெடரேஷனை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டுமென்கிறார். 'பரீட்சை செய்து பாருங்களேன், எப்படி யிருக்கிறதென்று' என்கிறார். 'ஐயோ, அது விஷப்பரீட்சை' என்கிறார்கள் நமது தலைவர்கள்.

ஸர். ராதாகிருஷ்ணன்கூட சமீபத்தில் பேசியபொழுது இந்தியாவிற்குச் சுயராஜ்யம் கொடுத்தால் தான் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் நிலைக்கும் என்று எச்சரிக்கை செய்தார்.

ஆனால் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் தள்ளிப் போட்டுக்கொண்டே போவது என்ற கொள்கையில் ஊறினவர்கள். சரியான சமயத்தில் காரியத்தைச் செய்யாது நிர்ப்பந்தம் ஏற்பட்ட பிறகு தான் அசைவார்கள். இதை லார்டு ஹெய்லியே ஒரு பிரசங்கத்தில் ஒத்துக் கொண்டு விட்டார். ஆகையால் சாம்ராஜ்யத்தின் எதிர்காலம் பிரிட்டனின் கையில்தான் இருக்கிறது.

தொழில் திட்டம்

டிஸம்பர் 17-ம் தேதி பம்பாயில் கூடின தேசியத் தொழில் அபிவிருத்தி திட்டக் கமிட்டியின் கூட்டம் நமது தொழில் முன்னேற்ற சரித்திரத்தில் ஒரு முக்கியமான தினமாகும். முதல் முதலாக ஜனப் பிரதிநிதிகள் கூடி பெரிய தொழில்கள், கைத்தொழில்கள் இவைகளைப் பிணைப்பதற்கான வழியைத் தேடி ஒரு அபிவிருத்தி திட்டத்தை வகுப்பதற்காக இப்பொழுது முனைந்திருக்கிறார்கள்.

இந்தக் கமிட்டியில் காங்கிரஸ் மாகாணங்கள் மட்டுமின்றி சில சமஸ்தானங்களும் பிரதிநிதித்துவம் பெற்றிருப்பது மிகவும் பெருமை கொள்ளக்கூடிய விஷயம். ஸ்ரீ. நேரு தலைமை வகித்துப் பேசியபொழுது, இந்தக் கமிட்டி எப்பொழுதும் நாட்டின் சுதந்திர இயக்கத்துடன் கலந்தே வேலை செய்ய வேண்டியது மிகவும் அவசியம் என்று வற்புறுத்தினார். வரவு செலவு திட்டம், காரியாலயம், தலைமை வேலையிடம் முதலியவை பற்றி ஆராய ஒரு தனிக் கமிட்டியும், மாகாணங்கள் சமஸ்தானங்கள் அபிப்பிராயத்தைக் கேட்டறிவதற்காக கேள்வித் தொகுதி தயாரிக்க மற்றொரு தனிக் கமிட்டியும் நியமனமாகி இருக்கின்றன. அகில இந்திய கைத்தொழில் சங்கப் பிரதிநிதி ஒருவரையும் தொழில் சங்கப் பிரதிநிதி ஒருவரையும் கமிட்டியில் சேர்த்து கொள்ளத் தலைவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதிலிருந்து சிறு கைத்தொழில்கள் விஷயத்தில் கமிட்டி அசிரத்தையாக இருக்காது என்று தெரிகிறது.

சங்கீத வித்வத் சபை

சங்கீத வித்வத் சபையும் ஃபைன் ஆர்ட்ஸ் சொஸைடியும் தனியாகத்தான் கச்சேரிகள் நடத்துகின்றன. சங்கீத விஷயமான சர்ச்சை தான் பொதுபோலிருக்கிறது. போகிறது.

ஒருவாரம் சென்னையில் சங்கீதம் எங்கும் நிறைந்து நிற்கும். பத்திரிகைப் பத்திகளில் கூடப் பாய்ந்தோடும். 'பாரதமணி'யிலும் அன்பர்கள் கொஞ்சம் பிரவாகத்தை எதிர்பார்க்கலாம்.

ஆனால் கச்சேரியின் இனிமையைச் சொல்லில் சொல்ல முடியுமா? முடியாது. இனிமையைக் கொடுக்க முடியாவிட்டாலும் இனிமையைப் பற்றிப் பேசலாமல்லவா?

முன்னூறாம் ஆண்டுவிழா

சென்னை நகரின் முன்னூறாம் ஆண்டு விழாவைக் கொண்டாட சென்னையில மும்முரமாக ஏற்பாடுகள் நடக்கின்றன. இதைக் கண்டித்து முதல் முதலில் ஸ்ரீ. பட்டாபி சீதாராமய்யா எழுதினார். பிறகு கண்டன இயக்கம் வலுத்து விட்டது.

சென்னையின் சரிதையில் நாம் என்ன கண்டு விட்டோம்? அதில் ஈடுபட என்ன இருக்கிறது? பாடல்பெற்ற ஸ்தலம் என்பதுபோல நமது சரித்திரத்தில் அது ஏதாவது பங்கெடுத்துக் கொண்டிருக்கிறதா? நமது கிராமங்கள் பாழடைவதற்கு ஒரு மார்க்கமாக இருந்ததைத் தவிர அதன் சேவை என்ன?



குக்கிராம வாசிகளுக்கு ரயில் பிரயாணம் என்றால் சந்தோஷம்—தங்கள் ஊருக்கு ரயில் போடப்போகிறார்கள் என்றால் இன்னம பத்து பங்கு சந்தோஷம். தங்கள் ஊருக்கு சர்க்கஸ், ஸினிமா வந்தாலும்கூட இவ்வளவு குதூகலமில்லை. இவைகளுக்கு கிராம ஜனங்கள் எல்லா வசதிகளையும் தடையன்னியில் செய்துக் கொடுப்பார்கள். கோடாலிக்சக் காம்பு போடத் தாய்மரம் தன் கிளைகளையே தலைவணங்கித் தியாகம் செய்வதுபோல. கிராமத்தின் பொருளாதாரத்திற்கு ரயிலேறி ஊர் பிரயாணம் செய்வதால் செலவென்றாலும் ரயிலோட்டமில்லாமல் நமது நவீன நாகரீகத்தின் சுகத்தை எப்படி அனுபவிக்கிறது? தவிர, ரயிலில் காசு கொடுத்து—அல்லது கொடுக்காமல்—ஏறி அனுபவிக்கா விட்டாலும், ரயிலோட்டமே கண்ணுக்கு அழகுதானே! கரையில் நின்று பார்த்தாலே களிப்பு. ஓட்டத்தின் மகிமையே மகிமை.

* * *

சமீபத்தில் நிறைவேறிய தஞ்சை ஜில்லா போர்டின் தீர்மானத்தை அளவில்லாத மகிழ்ச்சியுடன் இந்த வாரம் வாசித்தேன். எனக்கே லாட்டரிச் சீட்டு விழுந்து 'ப்ரைஸ்' கிடைத்தால் போலிருந்தது. எனக்கும் ரயிலோட்டத்தில், கிராம வாசிகளுக்கும், குழந்தைகளுக்குமுள்ள பைத்தியம் உண்டென்று உங்களுக்கு ஏற்கெனவே தெரியுமே. அரந்தாங்கியிலிருந்து காரைக்குடிக்கும், தஞ்சாவூரிலிருந்து பட்டுக் கோட்டைக்கும், உடனே ரயில் போடவேண்டியது அவசியம் என்று தஞ்சைஜில்லா போர்டு தீர்மானித்தார்களாம். சந்தோஷம். அதில் நஷ்டமேற்பட்டால் அந்த நஷ்டத்தையும் ஏற்றுக் கொள்ளுவதாய் தஞ்சை போர்டு ஒப்புக் கொண்டு விட்டார்களாம். ரயில் வீட்டு வாசலுக்கு வந்தால் போதும்.

இந்த நஷ்ட ஜாமீன் விஷயம் தான் எனக்கு வெகு நாளாய் புலப்படவில்லை. ஜில்லா போர்டின் தலையில் ரயில் போடும், ரயில் ஓட்டும் சுமையை மத்திய சர்க்காரும் 'ரயில்வே போர்டும்' கட்டுவதற்குக் காரணமும் நியாயமும் தெரியவில்லை. உலகத்தில் வேறெங்கும் ஓர் சிறிய ஜில்லா போர்டுக்கு ரயில் போடவும், நடத்தவும், பொறுப்பு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நமக்கு மாத்திரம் ஏன் இந்தப் பொறுப்பு? தாங்கக் கூடாத இந்தப் புதிய பித்தலாட்டச் சுமை? அரசியலிலும், தொழில் நிர்வாகம் செய்வதிலும் நாம் மிகவும் தேர்ச்சி அடைந்திருக்கிறோமென்றா? நமது நாட்டில், அதுவும் தமிழ் நாட்டில், ரோட்டுகளைப் போட்டுச் செப்பனிட்டு சரியாக வைத்துக் கொள்வதற்கே ஜில்லா போர்டுகளும் அதன் நண்பர்களும் மூச்சுவிட்டுத் திணறுகிறார்கள். ஒரு பக்கம் முட்டு முட்டாய் கப்பிக்கல். மத்தியில் எல்லாம் வண்டி கொடையடித்து ஆளைக் கவிழ்க்கும் பள்ளம் படுகுழி. ஓரத்திலும் போக முடியாது. சாலைமரத்தின் வேர்களின் உபத்திரவம். ரோட்டிலும் குலுக்கிப் போடாமல் போகமுடியாது. ஆனால் இப்படிச்சவாரி செய்வதிலும் தேகத்திற்கு ஒரு குணம் உண்டு. சதா நெய்யைக் குடித்துவிட்டுத் தூங்கும் பித்தப்பைக்கு இப்படிக் குலுக்கிப் போடுவதால் கொஞ்சம் சுறுசுறுப்பும், கண்திறப்பும், உயிரும் உண்டாகிறது. வேலை செய்யாமல், வண்டியிலே போகும் சுகவாசிகளுக்கு ஜில்லா போர்டு ரோட்டுகள் ஓர் ஈசனளித்த ஜீரணகாரி.

'ரோடு'களையும், 'ரயில்'களையும், 'பஸ்'களையும் ஒரே ஆட்சிக் குட்படுத்தி தேசியமாக்கி ஒன்று சேர்த்தால்தான் நமது தேசத்திற்கு க்ஷேமம்; நமக்கும் லாபம். ரயிலுக்கே சுகம். ரயிலில்லாத இடங்களில் பஸ்ஸை விரட்டி ரயிலுக்கும் பஸ்ஸுக்கும் உள்ள அநாவசிய அஸூயையையும் போட்டியையும் நீக்கி, இருவரையும் பொருத்தி மணம் செய்து வைக்க வேண்டும். இதுதான் 'ரயில்வே போர்டி'னுடைய நியாயமான முதல்வேலை. எந்த அதிகாரியிடம் பஸ்ஸை ஒப்பிவிக்கிறோமோ அவர் வசத்திலேயேதான் போர்டையும் ஒப்புவிக்க வேண்டும். கத்துக்குட்டிகள் கையிலும், எலக்ஷனில் விடாமல் ஜயித்து வருகிற சூரர்கள் கையிலும் ரோடை ஒப்புவிக்கக் கூடாது.

* * *

அரந்தாங்கியிலிருந்து ஆவுடையார் கோவிலுக்கு சென்ற ஆனிமாதம் போயிருந்தேன். ஊராரெல்லோரும் திரண்டு கூடி தங்கள் ஊருக்கு ரயில் வேண்டுமென்று என்னைக் கேட்டுக் கொண்டார்கள். சட்டையும் மூக்குக்கண்ணாடியும் போட்டுக்கொண்டு கையில் தோல்பையுடன் கோவில் கட்டளைத் தம்பிரானின் அழைப்பின்பேரில் அதிதியாய் நான் போயிருந்த படியால் இந்த மரியாதை. நான் தைரியமாய் வாக்குத்தத்தம் கொடுத்தேன்—ஒரு வருஷத்திற்குள் ரயிலை அவர்கள் ஊருக்கு வீட்டு வாசலுக்குக் கொண்டுவருவதாய் மகாத்மா காந்திபோல் கடவுளை நம்பி என்னை நம்பிக் கூடின ஜனங்களுக்கு உறுதி மொழி கொடுத்தேன். சாயங்காலம் அம்பாளை (யோகாம்பாள்) மனமிரங்கும்படி வேண்டினேன். ஆவுடையார் கோவிலே கோவில். அழகு வாய்ந்த கோவில். சில்ப ஸ்ரீயில் இதற்கு மிஞ்சியது நமது தமிழ் நாட்டிலும் கூட இல்லை. மாணிக்க வாசகரின் வாக்குப் போல மணிமணியாய் அமைந்திருக்கும் கோவில் இதுதான். கண் கொள்ளாச் சேர்வை.

அம்பாள் சன்னதியின் ஸாந்நித்யத்தில் நான் ஆழ்ந்து நிற்கும் பொழுது, அம்பாள் கழுத்தில் குவிந்திருந்த ரோஜாப்பூ மாலைகளிலிருந்து ஒரு புஷ்பம் தானாகவே உதிர்ந்து கீழே விழுந்தது. அதுவே திவ்ய சகுனம். ஊருக்கு ரயில் ஒரு வருஷத்தில் வந்து விடுமென்று நினைத்தேன். அப்படியே வந்துவிடும் போலிருக்கிறது. தஞ்சை ஜில்லா போர்டு அசைய ஆரம்பித்து விட்டதே. அவசியம் சேது மார்க்கத்தில் புராதனமாய் நிற்கும் ஆவுடையார் கோவிலுக்கு ரயில்பாதை வரவேண்டும். ஏனென்று பின் விவரமாய் கூறுகிறேன்.

ஸ்ரீ நாடிமுத்துப் பிள்ளையும் நமது மந்திரி சபையும் கொஞ்சம் முயற்சி எடுத்து நான் அளித்த வாக்கை இந்த அல்ப விஷயத்திலாவது காப்பாற்ற வேண்டும். டில்லி மத்திய சர்க்காரையும், ரயில்வே 'போர்டை'யும் வற்புறுத்த வேண்டும். புதுக்கோட்டை பாலைவனத்தில் இரண்டு பாலங்கள் கட்ட வேண்டுமென்று மத்ய சர்க்காரும் 'ரயில்வே போர்டும்' பிரமித்துத் தயங்குகிறார்கள், நஷ்ட ஜாமீன் கேழ்க்கிறார்கள் என்று அறிக்கையிலிருந்து தெரிகிறது. இதை நான் நம்பவில்லை. நீங்கள் நம்புகிறீர்களோ? என்ன ஆச்சரியம். இரண்டு பாலங்கள் கட்டத் தயங்கும் ரயில்வே போர்டு! தென் இந்தியா என்றால் அலட்சியம். வடக்கே ஒரு அடிக்கு ஒரு பாலம்—கங்கை ஓடும் கரையில்.

* * *

ரயிலில் 60 கோடி வருஷ வரும்படியை ஆண்டு அனுபவிக்கும் 'ரயில்வே போர்டுக்கு' இந்த வரண்ட தேசத்தில் இரண்டு காட்டாறுகளுக்கு (எப்போதும் மணல் தான்) பாலம் கட்டுவதா அசாத்தியமான காரியம்? சிந்து நதிக்கும், கங்கைக்கும், கோதாவரிக்கும், பாலம் போட்ட இவர்கள் இதைக்கண்டா பயப்படுகிறார்கள்? என்ன ஆச்சரியம்! உண்மையான காரணம் இது அல்ல. டில்லியில் சென்னை ராஜதானி என்றால் ஒரே அலக்ஷியம். மூத்தாள் பிள்ளை, ஏதோ வழிப்போக்கு விஷயம். கப்பம் கட்டுவதைத் தவிர நமக்கு இதர உரிமைகள் கிடையாதென்று டில்லி மத்தியசர்க்காரின் எண்ணம். இந்தக் கதையை நான் பூராவாகவும் தெளிவாய் எனக்கு தெரிந்த மட்டில் அடுத்த வாரத்தில் மறக்காமல் சொல்லுகிறேன். என்ன வேலை யிருந்தாலும் டில்லிக் கதையை கைவிடவில்லை. உண்மை.

மணி.

வாரச் செய்திகள்

லண்டனில் ஹெய்லி பிரபு இந்தியாவைப் பற்றி சில ரஸமான விஷயங்களைப் பேசினர். பிரிட்டிஷ் ஆட்சி முறையின் குறைகளையும், கல்வி முறையையும் கண்டித்துப் பேசினர். அப்படி நிஜத்தைச் சொன்னால் யாருக்குத் தான் பிடிக்கும்? அதே கூட்டத்தில் பிரசன்னமாயிருந்த ஸர் அதுல் சட்டர்ஜிக்குக் கோபம் வந்து ஹெய்லி சொன்னது பாதி சரி, பாதி தப்பு என்று பொழிந்து தள்ளிவிட்டார் இந்த தேச பக்தர்!

இதோடு நில்லாமல் இந்திய வியவகாரம் இன்னும் ரொம்ப அங்கே அடிபட்டிருக்கிறது. இந்த சமஸ்தான தொல்லை விஷயமாக பார்லிமெண்டில் பிரிட்டிஷ் சர்க்கார் வின்டர்டன் பிரபு கூறியதை மீண்டும்வற்புறுத்தி விட்டார்கள். சமஸ்தானதிபதிகள் சந்தர்ப்பங்களை ஒட்டி பொறுப்பாட்சி ஏற்படுத்துவதில் பிரிட்டன் தலையிடப் போவதில்லை என்று வாசாமகோசரமாகச் சொல்லிவிட்டார் கர்னல் லவ்லின்.

சேம்பர்லேன் அயல்நாட்டுக் கொள்கையைப் பற்றிப் பேசிய பேச்சைக் கேட்டு பிரான்ஸில் எல்லோரும் பூரித்துப் போய் விட்டதாக அறிகிறோம். மறுநாள் சேம்பர்லேன் பேசியபோது இங்கிலாந்தின் படை பலத்தைவிட பணப் பலம் தான் ஜயத்திற்கு அவசியமானது என்று கூறினர். அந்த ஸ்வாரஸ்யமான உண்மையைக் கேட்டு ஜெர்மனி பூரித்ததா இல்லையா என்று நமக்குத் தெரியவில்லை. ஆனல் சென்ற திங்களன்று சேம்பர்லேன் ஜெர்மனியைத் தட்டிக் கொடுத்து பார்லிமெண்டில் பேசி அதனிடமிருந்து ஒரு சமாதான சமிக்ஞை எதிர்பார்ப்பதாகக் கூறியது நிச்சயம் ஹிட்லரை விழுந்து விழுந்து சிரிக்கச் செய்திருக்கும்.

ஜெர்மனி பக்கம் திரும்பினல், அகன்பாட்டுக்கு தன் காரியங்களை ஜமாய்த்துக்கொண்டு வருவது தெரிகிறது. மெமல் தேர்தலில் நாஜிகள் பூழுபலத்துடன் பிரசாரம்செய்து ஜெயமடைந்திருக்கிறார்கள். இது போதாதென்று உக்ரைன் சுயேச்சைக்காகஒரு ரகசிய சங்கம் பர்லினில் ஸ்தாபித்தாகி விட்டதாக ஒரு பத்திரிகை கூறுகிறது. இந்த முயற்சிகளெல்லாம் ஜெர்மனி உக்ரைனை 'ஸ்வாஹா' பண்ணுவதற்குத் தானென்று தெரிந்து கொண்டு போலந்த் கலங்கிப் போயிருக்கிறது. இந்தப் பெரிய விஷயங்கள் போனல் போகட்டும். இங்கிலாந்திலுள்ள ஜெர்மன் கம்பெனிகளிலிருக்கும் யூதர்களையும் பிரிட்டிஷ்காரர்களையும் கல்தா கொடுக்கும்போது ஜெர்மனியின் தைர்யம் எப்படிப்பட்டதாயிருக்கவேண்டும்?

இதாலியிலும் பிரான்ஸிலும் டியூனிஸ் விஷயமாக நடந்த ஆர்ப்பாட்டங்கள் கொஞ்சம் ஓய்ந்திருக்கின்றன. பெர்லின் பத்திரிகைகளுக்கு இந்த அமைதி பிடிக்கவில்லை. மறுபடியும் இந்த பிரச்னையைக் கிண்டிவிடும் கைங்கர்யத்தைச் செய்ய முன்வந்திருக்கின்றன.

குழப்பம் மிகுந்த ஐரோப்பாவை விட்டு இந்தியாவுக்கு வந்தால் எங்கும் அமைதியான உத்சாகத்தைக் காண்கிறோம். பம்பாயில் தேசீயத்தொழில் அபிவிருத்திக் கமிட்டி கூடி உற்சாகத்துடன் ஆராய்ச்சி செய்கிறது. அகில இந்திய காங்கிரஸ் திருபுரியில் கூடுவதற்கு ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். கல்கத்தாவில் வைஸ்ராய் பிரபு சமஷ்டியை ஒருதடவை பரீட்சை செய்து பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறார். சமஸ்தானங்களுக்குப் பொறுப்பாட்சி கொடுத்து விடும்படி ஸர்தார் படேல் மன்னர்களை எச்சரிக்கிறார்.

சமஷ்டியை நிர்மூலம் செய்ய வேண்டுமென்று சுபாஸ்போஸ் அறைகூவுகிறார். புலாபாய் தேசாய் சமஸ்தானத்தில் பொறுப்பாட்சி ஏற்பட்டாலொழிய பொறுப்புள்ள எவனும் சமஷ்டியை விரும்பமாட்டான் என்று கூறுகிறார்.

இப்படியாக சமஷ்டி பலபேரால் பிடுங்கப்பட்டுக் கஷ்டப்பட்டு வருகிறது. ஏதோ ஜாதக விசேஷம்!

திருவாங்கூர் சர்க்கார்கூட மிக உத்சாகமாகக் காரியம் செய்வதையும் காண்கிறோம். மகஜரில் கையெழுத்திட்ட நபர்களையெல்லாம் அமைதியான உற்சாகத்தோடு பிடித்து சிறையில் போடுகிறார்கள்.

மகாநாடுகளுக்குத் திருஷ்டி பரிகாரம் போல் ஜஸ்டிஸ் கட்சியார் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை விரைவில் கூட்டப் போகிறார்களாம்.

மாஜி காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ. எஸ். ஸ்ரீனிவாஸய்யங்கார் பார்க்டவுனில் அன்று 'மாஜி' பட்டத்தைத் துறக்க முயன்றார். பொதுக் கூட்டத்தில் பேசியபோது அவர் ஒரு நெருக்கடி யேற்பட்டால் காங்கிரஸில் சேரப் போவதாகத் தெரிவித்தார். நமக்குள் ஒற்றுமை இருந்தால் தான் அவர் வந்து சேருவாராம்.

பாங்குகளும் செல்வப்பெருக்கும்

(பாலு)

நமது தேசத்தின் செல்வப் பெருக்கத்திற்கு பாங்குகள் எவ்வாறு காரணபூதமாக இருக்கின்றன வென்று பெரும் பான்மையோர் தெரிந்து கொள்ளவில்லை.

முக்கியமாய் தேசத்தின் செல்வப் பெருக்கமானது தேசத்தின் வியாபாரத்தைப் பொருத்ததாயுள்ளது என்று மட்டும் பொதுவாக ஜனங்கள் அறிவார்கள். பாங்குகள் அவ்வியாபார அபிவிருத்திக்காக எவ்வாறு ஒத்தாசை செய்கின்றன என்பதைப்பற்றி இங்கு கூறுவோம்.

வியாபாரிகளுக்குத் தாங்கள் வியாபாரம் செய்யும் சரக்குகளை மலிவான காலத்திலேயே போதுமான அளவு வாங்கி வைத்துக்கொண்டு, சிறுகச் சிறுக, கிராக்கி காலங்களில் விற்பனை செய்து அதனால் சொல்ப லாபம் சம்பாதிக்க பாங்குகளின் ஒத்தாசை மிக அவசியமானது. சரக்கு ஈட்டின் பேரில் வேண்டிய தொகையை பாங்கிலிருந்து வாங்கி, வியாபாரிகள் சரக்கு விற்க பாங்கு கடனைக் கொடுத்துத் தாங்களும் அதன் மூலமாய் லாபம் அடைகிறார்கள். இது ஒருமுறை.

சரக்குகளை ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு ஏற்றுமதி செய்யுங் காலங்களில் பாங்கர்கள் வியாபாரிகளுக்குச் செய்யும் ஒத்தாசை மிகவும் பாராட்டத்தக்கது. வியாபாரம் தீவிரமாய் நடக்கும் சமயத்தில், வியாபாரிகளுக்குத் தங்கள் முதலை முடக்க முடியாதாகையால் பாங்கர்கள் செய்யும் உதவியானது அவர்களுக்கு எவ்வளவு சௌகரியமாக விருக்கிறதென்று பின்வருமாறு காணலாம்.

தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து நெல்லும் அரிசியும் ஏராளமாகப் பல ஊர்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதென்பது பிரசித்தமான விஷயம். ஓர் வியாபாரி ஆயிரம் ரூபாய் பெறுமான நெல்லை ராமனுதபுரம் ஜில்லாவுக்கு அனுப்ப வேண்டுமானல் சரக்கு மூட்டைகளை இருப்புப்பாதை மூலமாய் அனுப்பி, ராமனுதபுரத்திலுள்ள வியாபாரிக்கு அது சம்பந்தமான ரயில்வே ரசீதை அனுப்பின பிறகுதான் அங்குள்ள வியாபாரி சரக்கைப் பெற்றுக்கொண்டு அதற்குண்டான பணத்தை அனுப்பக்கூடும். இங்கிருந்து ராமனுதபுரத்துக்கு சரக்குப் போய்ச் சேர சுமார் ஒரு வாரமும் அங்கிருந்து அவ்வியாபாரி சரக்கை எடுத்துக்கொண்டு பணத்தை அனுப்ப மற்றொரு வாரமும் ஆக இரண்டு வாரத்திற்குப் பிறகுதான் தஞ்சாவூரிலுள்ள வியாபாரிக்குப் பணம் கிடைக்கும்.

தங்களுடைய முதலில் ஆயிரம் ரூபாயை மேற்கூறியபடி இரண்டு வாரம் முடக்கும்படியிருந்தால் விரிவாக வியாபாரம் செய்து வியாபார காலத்தில் ஒரு சுமாரான லாபத்தைச் சம்பாதிக்க வியாபாரிகளுக்கு முடியாது. அப்படிக்கில்லாமல் பாங்கர்கள் ஏற்றுமதி செய்யும் வியாபாரிகளுக்கு முன்னமேயே தொகை கொடுத்து விடுகிறார்கள். தாங்கள் கொடுக்கும் தொகைக்கு ஈடாக ரயில்வே ரசீதைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். ஏற்றுமதி அனுப்பப்படும் ஊரிலுள்ள வியாபாரியிடம் தங்களுக்கு வரவேண்டிய தொகையைப் பெற்றுக்கொண்டு, பிறகுதான் ரயில்வே ரசீதை அவரிடம் கொடுப்பார்கள். பாங்கர்களுக்குத் தாங்கள் முன்னல் கொடுத்துப் பிறகு வசூலிக்கும் வரையில் உள்ள நாட்களுக்கு வட்டியும் பிற ஊரிலிருந்து வசூலிப்பதாக விருப்பதால் அதற்காகச் சொல்ப வட்டமும் கிடைக்கும்.

இதிலிருந்து ஒரு ஜில்லாவிலிருக்கும் பணம் மற்றொரு ஜில்லாவுக்கு மேற்கூறியபடி வியாபார முறையில் அனுப்பப்பட்டு, அப்படிப் பணத்தைப் பெறும் ஜில்லாவின் செல்வம் அதிகப்படுகிறது. அதேமாதிரி நமது தேசத்திலிருந்து

பிற தேசங்களுக்கு ஏராளமான சாமான்கள் அனுப்பப்படுகின்றன. முக்கியமாக நமது தேசம் விவசாயம் பலத்த தேசமாகையால், பருத்தி, நெல், மற்றுமுள்ள பூமியில் விளைந்த சாமான்கள்தான் அதிகமாகப் பிற தேசங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இந்த சாமான்களைப் பிற தேசங்களுக்கு அனுப்பும் வியாபாரிகளுக்கு பாங்கர்களின் உதவி இல்லாமல் போனுல் அவர்களுக்கு எவ்வளவு சொந்த முதல் இருந்தாலும் முதல் முடக்கமின்றி வியாபாரம் செய்ய ஏதுவில்லை. பாங்கர்களின் உதவியால் தாங்கள் பிற தேசங்களுக்கு அனுப்பின சரக்குகளுக் குண்டான கிரயத்தை அனுப்பிய உடனேயே பாங்கர்கள் மூலமாய் வாங்கிக் கொள்வார்கள். அயல் தேசத்திலிருந்து நமது தேசத்திற்கு மேற்கூறியபடி பணம் வந்து நமது தேசத்தின் செல்வப் பெருக்கம் அதிகரிக்கிறது. இதற்காக வியாபாரிகளுக்கு பாங்கர்கள் செய்யும் ஒத்தாசை இரண்டாவது முறை.

ஒரு வியாபாரி தன்னூரிலிருந்து மற்றொரு ஊரிலுள்ள வேறொரு வியாபாரிக்குச் சரக்கு விற்ருல், அவனுடைய யோக்கியதை நன்ருய்த் தெரிந்தாலொழிய சரக்கு விற்க முடியாது. தவிர, சரக்கு வாங்கும் வியாபாரி தான் வாங்கும் சரக்குக்காக ஒரு ஏற்பாடு செய்து கொண்டு அதன்படி முன் பணம் கொடுக்கும்படியிருக்கும். அந்த முன்பணமும் பாங்கர்கள் மூலமாய்த்தான் அனுப்புவான். அந்த முன்பணமும் போக பாக்கித் தொகை மாத்திரம்தான் பாங்கர்கள் சரக்கு விற்கும் வியாபாரிக்குக் கொடுக்கும்படியாக இருக்கும். இதனுல் பாங்கர்களுக்குத் தாங்கள் கொடுத்த பணத்தைப் பூராவாக வசூலிப்பது சுலபமாய்விடுகிறது. நஷ்டம் ஏற்படவும் ஏதுவில்லை. ஏனென்ருல் அந்தச் சரக்கை வாங்கும் வியாபாரி தொகையைக் கொடுத்துச் சரக்கை எடுக்காமல் போனுலும் சற்றுக் குறைந்த விலைக்காவது பாங்கர்கள் சரக்கை விற்றுத் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய தொகையைப் பெற்றுக் கொள்வார்கள். இம்மாதிரி ஒரு ஊரிலுள்ள வியாபாரி தான் வாங்கும் சரக்குக்காகவோ, அல்லது வாங்கப்போகும் சரக்குக்கு அட்வான்சாகவோ அனுப்ப வேண்டிய தொகைகளைக் குறைந்த வட்டத்துக்கு அனுப்ப பாங்கர்கள் ஒத்தாசை செய்கிருர்கள். வியாபாரிகளுக்குச் செய்யும் உதவிகளுள் இது மற்ருெரு முறை.

வியாபாரிகளுக்குள் ரொக்க ரூபாய் கொடுத்து வியாபாரம் செய்து கொள்ளுவது எப்போதுமே முடியாத காரியம். ஜவுளிக் கடைக்காரர்கள் தீபாவளிக்கு முன்னுலும் பொங்கல் பண்டிகைக்கு முன்னுலும் ஒரு மாதமோ அல்லது இரண்டு மாதமோ தவணை போட்டு முன்னுல் சரக்கை வாங்கி வைத்து அவற்றை விற்ற பிறகு பணம் அனுப்புவது சகஜம். ஆனுல் இவர்களுக்குச் சரக்கு விற்கும் வியாபாரிகள் தங்கள் முதல் முடக்கப்படாம விருப்பதற்காகத் தங்களிடம் சரக்கு வாங்கும் வியாபாரிகளின் பேரில் தங்களுக்கு வரவேண்டிய தொகைக்காகத் தவணை உண்டியல் எழுதி, அந்த உண்டியல்களைப் பாங்கர்களிடம் கொடுத்து முன்னமேயே பணத்தை வாங்கிக் கொள்வார்கள். இம்மாதிரித் தவணை உண்டியல்களை வைத்துக்கொண்டு பாங்கர்கள் பணம் கொடுப்பதற்கு டிஸ்கௌண்ட் (Discount) செய்கிறது என்று சொல்வது வழக்கம். அதாவது உண்டியல் எவ்வளவு நாள் தவணைக்கு எழுதப்பட்டிருக்கிறதோ அவ்வளவு நாட்களுக்குண்டான வட்டியை முன்னமேயே பிடித்துக்கொண்டு பாக்கித் தொகையைக் கொடுப்பார்கள். தவணைத் தேதியில் முழுத் தொகையையும் அது எழுதப்பட்ட ஆசாமியிடமிருந்து வசூல் செய்துகொள்வார்கள். இந்தமாதிரி டிஸ்கௌண்ட் செய்யப்படும் உண்டியல்கள் எழுதுகிற வியாபாரிகளும் யார் பேரால் அவ்வுண்டியல்கள் எழுதப்படுகின்றனவோ அந்த வியாபாரிகளுக்கும் தகுந்த பேர்வழிகளா, அதாவது நாணயப் பொறுப்புள்ளவர்களா வென்பதைத் தீவிரமாகத் தெரிந்துகொண்டுதான் உண்டியல்களுக்குப் பணம் கொடுப்பார்கள். வியாபாரிகளுக்கு பாங்கர்கள் செய்யும் உதவிகளுள் இது மற்றுமொரு முக்கியமான முறையாகும்.

நபர் ஜாமீனின்பேரில் பாங்கிலிருந்து கடன் வாங்கலாமென்ற விஷயம் பெரும்

பான்மையோருக்குத் தெரிந்ததே. அதன் விவரம் இங்கு சொல்லத் தேவையில்லை.

இம்மாதிரிப் பல விதங்களில் பாங்கர்கள் நமது வியாபாரிகளுக்குச் செய்து வரும் ஒத்தாசைபோல் வேறு தனி நபர்களால் செய்ய இயலாது. நமது வியாபாரிகளுக்கு இந்தமாதிரியுள்ள ஒத்தாசைகள் இன்றியமையாதவை என்று நமது தேசத்தின் க்ஷேமத்தைக் கருதக்கூடிய ஒவ்வொருவரும் உணரவேண்டும். பாங்கர்கள் இம்மாதிரி ஒத்தாசை செய்ய இயல்புள்ளவர்களாக ஆவதூ ஜனங்களின் பணத்தைக் கொண்டுதான். நாம் பாங்கர்களிடம் டிபாசிட்டாகப் போட்டு வைக்கும் பணத்தின் உதவியால்தான் மேல் கூறியவாறு பலவிதமான சௌகரியங்கள் அவர்களால் செய்ய முடிகிறது. ரொக்க ரூபாய் வைத்திருக்கும் முதலாளிகள் ஒவ்வொருவரும் பாங்கர்களிடம் தங்கள் பணத்தை வட்டிக்குப் போட்டாலொழிய பாங்கர்கள் தங்கள் தொழிலைச் சரிவர நடத்த முடியாது. பாங்கர்கள் ரொக்க முதலாளிகளுக்கும் வியாபாரிகளுக்கும் மத்தியஸ்தானமாயிருந்து இவ்விருவர்களுக்கும் சௌகரியம் செய்துக் கொடுத்துத் தாங்களும் சௌகரியம் அடைகிறார்கள். உத்தியோகஸ்தர்களுக்கும் மற்றுமுள்ள மாதச் சம்பளம் வரும் ஜனங்களுக்கும் சிறிது சிறிதாகப் பணத்தைப் போட்டுக் கொண்டு கலியாணம் முதலிய விசேஷங்களுக்கோ அல்லது வயது முதிர்ந்த காலங்களில் தங்கள் ஜீவனோபாயத்திற்கோ ஓர் மொத்த தொகை சேமிப்பதற்குப் பாங்கர்கள் செய்யும் ஒத்தாசை மிகவும் பாராட்டத்தக்கது.

ஏராளமான ரொக்கம் வைத்திருக்கும் முதலாளிகளுக்கும் தங்கள் முதலை வருஷத் தவணையாக பாங்குகளில் கொடுத்து குறிப்பிட்ட காலங்களில் வட்டியை வாங்கிக்கொண்டு தங்கள் காலக்ஷேபம் செய்ய பாங்கர்கள் சௌகரியம் செய்து கொடுக்கிறார்கள். அப்படிக்கில்லாமல் அம்முதலாளிகள் தனி நபர்களுக்கு நாணயம் கொடுப்பதாக விருந்தால் ஒழுங்காகக் குறிப்பிட்ட காலங்களில் வட்டி வராததோடும்கூட ஒவ்வொரு சமயங்களில் முதலுக்கே மோசம்வர ஏது வுண்டு. தப்புக் கக்ஷிகள் சொல்லி வாங்கின பணத்தைக் கொடுக்காமல் ஏமாற்ற முயல்வது சில சமயங்களில் கடன் வாங்கினவர்களுக்கு சகஜமாக விருக்கிறது. வாங்கின கடனை யோக்கியமாகக் கொடுக்கவேண்டுமென்ற எண்ணமுள்ளவர்களுக்குத் தங்கள் உதார குணத்தினாலோ, அல்லது ஏதாவது எதிர்பாராத சம்பவங்களினாலோ தாங்கள் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் போய்விடுகிறது.

நமது அனுபவத்தில் இம்மாதிரி சம்பவங்கள் அடிக்கடி நேருவதைக் கண்டிருக்கிறோம். இவை அதிகரிக்க அதிகரிக்க ஜனங்கள் தங்கள் பணத்தை, குறைந்த வட்டியா யிருந்தாலும், முதலுக்கு மோசமில்லாமலிருந்தால் போதுமானது என்று எண்ணி பாங்கிகளிலேயே டிபாசிட்டு செய்ய இப்போது ஆரம்பித்துவிட்டார்கள். பாங்குகளிலும் டிபாசிட்டுகள் அதிகரித்துப் போனமையால் அவர்களும் தங்கள் தொழிலை மிகவும் விரிவாகச் செய்து பல ஜனங்களுக்கும் நவீன நாகரிக முறைகளை ஒட்டித் தொழில் செய்து ஒத்தாசை செய்ய சக்தி ஏற்பட்டது. புதிதான பாங்க் ஸ்தாபனங்களும் அனேகம் உண்டாயின. ஆண், பெண் ஆகிய இருவகையினருக்கும் பாங்குகளினால் உண்டாகும் சௌகரியங்கள் நன்றாகத் தெரிந்து பாங்க் உணர்ச்சி ஏற்பட்டுவிட்டது. சுமார் சென்ற பத்து வருஷங்களாக நாளுக்கு நாள் இவ்வுணர்ச்சி அதிகரித்துக்கொண்டு தேசத்தின் செல்வ நிலையை விருத்தியாக்க அனுகுணமாக விருந்தது.

மிகவும் விசனிக்கத்தக்கதான ஓர் சம்பவம் சமீபத்தில் நடந்ததால் பொது ஜனங்களுக்கு பாங்குகளிலேயே ஓர்வித வெறுப்பும் அவநம்பிக்கையும் ஏற்பட்டுவிட்டன. தாங்கள் பாங்கில் போட்டிருந்த தொகைகளை வாங்கிக்கொண்டு அவைகளை என்ன விதமாக பிரயோகிக்கலாமென்று தெரியாமல் தவித்துக்கொண் டிருக்கிறார்கள். நிலம் வாங்கலாமென்றாலோ குடியானவர்களுக்கும் நிலச்சுவான்தார் களுக்கும் ஏற்படும் விவகாரங்களினால் நிலம் வாங்கப் பயப்படுகிறார்கள். தனியே நாணயம் கொடுத்து வாங்கலாமோவென்றால்

அதற்கும் யோக்கியப் பொறுப்பான இடங்கள் கிடைக்கவில்லை. பாங்குகளிலேயோ நம்பிக்கை வரவில்லை. இவையெல்லாம் முடிவில் நமது தேசச் செல்வ நிலையைக் குறைப்பதற்கே காரணமாக விருக்கிறது. செம்மையாகத் தொழில் செய்துவந்த பாங்கர்கள் தங்களிடமிருந்த டிபாசிட் தொகைகள் குறையக் குறைய அதற்குத் தகுந்தவாறு தங்களுடைய தொழிலையும குறைக்கும்படி நேரிடுகிறது. அப்படிச் செய்வதானது அவர்களை நம்பிக்கொண்டு வியாபாரம் செய்துவந்த வியாபாரிகளைக் கைவிடுவதாக விருக்ிறது. ஆனால் அதற்கு பாங்கர்கள் என்ன செய்வார்கள்? சட்டியில் இருந்தால்தானே ஆப்பையில் வரும்? பாங்க்ர்களிடமிருந்த டிபாசிட்டுகள் குறைந்து போய்விட்டால் அவர்கள் வியாபாரிகளுக்கு எப்படி ஒத்தாசைசெய்ய முடியும்?

ஒரு இடத்தில் ஒரு பிசகு நடந்துவிட்டால் எல்லா விடங்களிலும் அப்படியே நடக்கும் என்ற பீதி ஜனங்களுக்கு ஏற்படுவது மிகவும் தவறு. அவர்களின் பணம் சாவதானமாய் இருக்குமா வென்று சுலபமாய் அவர்கள் தெரிந்துகொள்ளலாம். இதை நன்குணர்ந்து பாங்க் உணர்ச்சியுள்ள பெரும்பான்மையோரும் பாங்க் டிபாசிட்டுகளை விருத்தி செய்து தேசச் செல்வ நிலையை முன்னேற்ற வேண்டும்.

ஸௌத் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி, லிமிடெட்.

ஸௌத் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடியின் ஆருவது வருஷ ரிபோர்ட் இக் கம்பெனியின் முன்னேற்றத்தை விளக்கிக் காட்டுகிறது. 1938-ம் வருஷம் ஜூன் மீ 30-ம் தேதியன்று 6647 அங்கத்தினர்கள் 6612 நபர்கள் 8549 பங்குகளையும் 35 ஸ்தாபனங்கள் 37,050 பங்குகளையும் கொண்டிருந்ததாக அறிக்கை கூறுகிறது. ஸொஸைடியின் வசூலான பங்குத் தொகை ரூ. 45,599. இந்த வருஷத்தில் 1999 மெம்பர்கள் சேர்ந்திருக்கிறார்கள். ரூ. 2,078 பெருமானமுள்ள பங்குகள் ஒதுக்கப்பட்டன. நடைமுதல் வருஷத்தில் 2866 பிரேரணைகள் வந்திருக்கின்றன. ரூ. 19,25,225 பெருமானமுள்ள 2276 பாலிஸிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. சென்ற வருஷத்தைக் காட்டிலும் ஒன்றரை மடங்கு மேலாகவே 'பிஸினஸ்' செய்யப்பட்டிருக்கிறது. வருஷ முடிவில் மொத்த பாலிஸிகளின் தொகை 7630; பெருமானம் ரூ. 64,41,450.

வருஷ ஆரம்பத்தில் ஆயுள் நிதி ரூ. 1,83,896-10-10. ஆனால் வருஷ முடிவில் ஒரு லக்ஷம் ரூபாய் அதிகமாகி ரூ. 2,83, 955-4-1 ஆக இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஸொஸைடியின் நிதியை ஜி. பி. நோட்டுகளிலும், கோவாப்ரேடிவ் ஸென்ட்ரல் பாங்க் போன்ற ஸ்தாபனங்களின் டிபஞ்சர்களிலும், பெயர்போன கோவாப்ரேடிவ் ஸ்தாபனங்களில் டிபாஸிட்டுக்களாகவும் போட்டு வைத்திருப்பது நிர்வாகிகளின் ஜாக்கிரதையையும் திறமையையும் காட்டுகிறது.

கிராமக் காற்று

(ஸ்ரீ சுத்தானந்த பாரதி)

இப்போது ஊரெல்லாம், தலைக்குத் தலை கிராம நிர்மாணப் பேச்சாயிருக்கிறதல்லவா? எனக்கும் நகரவாடை, நரக வாடையாயிற்று. "டுர்ர், டுர்ர்" என்று டிராமும் மோட்டாரும் எனது அமைதியை இரம்பம் போட்டு அறுத்தன. கோடை வெயிலில் தார் ரஸ்தாவில் நடந்து பித்த வெடிவினால் அவஸ்தைப் படும் எனக்குக் கிராமப் புழுதிமண்ணில் புரண்டாலும் பரவாயில்லை யென்று தோன்றியது. ஹைகோர்ட்டும், மாளிகைகளும் மனிதனுக்கும் இயற்கைக்கும் நடுவே பூதாகாரமாக எழுந்துநிற்கும் தடைச்சுவர்கள் போலத் தோன்றின. தஸரா விடுமுறையும் வந்தது. "போ கிராமத்திற்கு" என்று நகரக் காற்று 'பட்டணம் கெல்தா'க் கொடுத்தது. அடையாற்றைப் பார்க்க ஓடினேன். பழக்கம் விடுகிறதா? பைக்ராப்ட்ஸ் ரஸ்தா வந்ததும் கால் என்னை நேராகத் திலகர் கட்டத்திற்கே இழுத்துச் சென்றது.

"ஹா...ஹப்பாடா!" என்று திருவல்லிக்கேணிக் கடற்காற்றை வனுந்தர ஒட்டகம் நீர் உறுஞ்சுவதுபோல இழுத்தேன். கிராம நினைப்பெல்லாம் மறந்து போனது. அத்துடன் ரேடியோச் சத்தமும் காதில் வந்து முணுமுணுத்தது. "கிராமமாவது மண்ணாவது, சைனா பஜார் தூசியிலே பெறுமா?" என்று மனம் மாறியது.

சென்னையில் சுவர்க்கலோகம் எது சொல்லுங்கள்? எனக்குத் திருவல்லிக்கேணி கடற்கரைதான். அதன் மாலைக் காட்சி எவ்வளவு வசீகரமா யிருக்கிறது! வாழ்வின் இன்பதுன்பப் பாட்டிற்கு நித்திய சுருதி முழக்குகிறது அகண்ட கடல். அதன் கர்ஜனையுடன் எத்தனை பாஷைகள், எத்தனை உள்ளங்களின் குதூகலங்கள், எத்தனை வாலிபரின் சிரிப்புகள் கலக்கின்றன! கனவு காணும் காதலர், கவலையற்று விளையாடும் சிறுவர், அரட்டையடிக்கும் வாலிபர், தம் குடும்பக் கதைகளைச் சொல்லிக்கொண்டிருக்கும் சம்ஸாரிகள், யாரையோ சுடுவது போல கையை நீட்டிக் கட்சி பேசும் அரசியல் மூளைகள்—சென்னையில் எத்தனை பேச்சு, நடை, உடை, பாவனை, விவகாரங்கள் உண்டோ அத்தனையும் இக்கடற்கரையில் மாலைதோறும் சாட்சியளிக்கின்றன. இக்காட்சிக் கிடையே, "சுடச் சுடச் சுண்டல்! வடை! பட்டாணி!" என்று வியாபாரத்தைப் பார்க்கின்றனர் சிலர். "ஐயா ஒருகாசு! இரண்டு நாள் பட்டினி!" என்று நீட்டும் பஞ்சைக்கள் நமது இரக்கத்தை உந்தி இழுக்கின்றன. "இந்து, சுதேசமித்திரன்" என்று பத்திரிகைப் பையன்கள் காதைத் துளைக்கின்றனர். அங்கே சிம்மக் குட்டிகள் போலே பாய்ந்து வந்து உலகிற்கு ஏதோ ஒரு செய்தியைக்கர்ஜித்து எழுதிச் செல்லும் கடல் அலைகள்; இங்கே, பேச்சும் சிரிப்பும், துக்கமும், புலப்பமும் புரளும் ஜனத்திரைகள். இரண்டையும் பார்த்துக்கொண்டு நான் ஒரு கனவுக் கடலில் சூழ்ந்துவிட்டேன்.

"பாரத மணீ ஓரணா, பாரதமணி!" என்று ஒரு சில்வண்டு கத்தியது. பெயர் புதிது; ஒளியும் ஒலியும் நிறைந்தது. நான் ஒரு பாரத மணி வாங்கி ஆவலாகப் பார்த்தேன். பத்திரிகையைத் திறந்ததும்... "நகரமா நரகமா?" என்றோர் கட்டுரை யிருந்தது. அதை எழுதியவர் ஜி. டி. ராமு. "ராமு, ராமு; ஆமாண்ணா நமது ராமுதான்...!" 26 ஆண்டுகள் நினைப்பை மூடியிருந்த பனி விலகியது. அன்பு ராமு எதிரே நின்றான். இப்படி நான் ராமுவை நினைக்கும்போது "நல்ல பத்திரிகையா யிருக்கிறதே, எங்கே அண்ணா பார்ப்போம்" என்று ஒரு "தம்பி" வந்து சேர்ந்தார். நமது நாட்டிலேதான் ஒரு வழக்கம் இருக்கிறதே.

ஓசிப்பொடி, ஓசிச்சட்டை, ஓசிக்குடை, ஓசி வண்டி... அனைத்துடனும் ஓசிப் பத்திரிகை ஒரு ஜன்மப் பழக்கமாய்விட்டதல்லவா? தம்பி பசக்கென்று என்கையிலிருந்த பத்திரிகையைப் பறித்து "நகரமா, நரகமா!" என்ற கட்டுரையை நீர்வீழ்ச்சி மாதிரி சத்தம் போட்டுப் படிக்கத் தொடங்கினன். அதன் உரப்பான வார்த்தைகள் என்னை மீண்டும் பட்டணம் கெல்தாக் கொடுத்துக் கிராமத்திற்குத் தள்ளின. கட்டுரை படித்தானதும் சமயம்பார்க்கும் காக்காய்போலே ஆசாமி என்னைப் பார்த்தார்; தம்பி சண்டப்பிரசண்டமாகக் கிளம்பினர். அங்கே ஒரு கூட்டம் கூடிவிட்டது என்றால் பாருங்களேன். அவர் சொல்மழை முழுதும் எழுதினல் பத்திரிகை தாங்காது. எனக்குப் பிடித்த பாகத்தை மட்டும் இங்கே குறிக்கிறேன்.

"அண்ணு, இந்த ஜி.டி. ராமு யார் தெரியுமா? தஞ்சாவூர்க்காரர்; அவர் இங்கே படிக்க வந்ததும், நாலுகைச் சட்டை போட்டு, ஹைகோர்ட்டில் நுழைந்ததும் எனக்குத் தெரியும். இங்கிலீஷ், இங்கிலீஷ், அப்படி இங்கிலீஷ் பேசுவார்; எழுதித் தள்ளுவார். எதிர் வக்கீல் திணறிப் போகும்படி லா பாயிண்டுகளை எடுத்து வீசுவார். நாலும் தெரிந்தவர். நாலு பக்கமும் சுற்றிப் பார்த்தவர்; சிநேகத்திற்கு இனியவர்; காசை இலட்சியம் செய்யமாட்டார்; கொஞ்சம் பசையுள்ளவர்; ஏழை என்றால் ஒருபிடி அன்னம் போடக்கூடியவர். அவர் புத்தி சாமர்த்தியத்திற்குத் திலகர் கட்டம் வணங்கும். மேயர் பதவி, சட்டசபை அங்கம், மந்திரிப் பதவி, அதற்குமேலும் கிடைக்கும். எல்லாவற்றையும் தூசிபோல ஒதுக்கி, இப்போது கிராமம் கிராமம் என்று உயிரை விட்டுக்கொண்டு கபாலீசுவரர் தெருவில் கிழக்குப் பார்த்த மாடிவீட்டில் இருக்கிறார். எங்கேயோ கிராம வேலை நடத்துகிறாராம்."

அதுதான் நான் கேட்க நினைத்தது—ராமுவின் விலாசம். எழுந்தேன். தம்பியின் அடை மழை திருவல்லிக்கேணி ஹைரோடு வரையில் என்னை விடவில்லை. "ஆள் இப்படியும் உண்டா ஐயா? பட்டணத்தின் சுகம் வருமா? இந்த ரேடியோப் பேச்சும், பாட்டும், டாக்கியும், டிராமும், மின்ஸார அதிசயங்களும், கலகலப்பான கடைகண்ணிகளும், வானேங்கிய மாளிகைகளும், தலைகீழே நின்று தவம் செய்தாலும் பட்டிக்காட்டிலே கண்டுபிடிக்க முடியுமா ஐயா? அவரைக் கண்டால் நேரே வெளுத்து வாங்குவேன்...." என்று பொழிந்து தீர்த்தார். அவர் ஒரு தங்க வியாபாரி, ராமுவுக்குத் தாயாதி என்று பின்னல் தெரியவந்தது. "பாக்கி நாளை ஆகட்டுமே வந்தனம்!" என்று நயமாகத் தப்பித்துக்கொண்டு நான் மைலாபூர் டிராமில் ஏறினேன்.

டிராம் முன்னே போகிறது. என் ஞாபகம் பின்னே ஓடி வாலிபப் பருவத்தை அடைகிறது......இருபத்தாறு ஆண்டுகளுக்கு முன்னே நானும் ராமுவும் இதே டிராமில் ஏறிச் சென்னையைச் சுற்றிப் பார்த்தோம். அதே கடற்கரையில் உட்கார்ந்து அரட்டை யடித்தோம். பைரனின் கடற்பாட்டைப் பாடினேம். இருவரும் ஒரே அறையில் வசித்தோம். ஒரு ஸ்டௌ வைத்துக்கொண்டு துண்டுக் குடித்தனம் கூடச் செய்தோம். கல்லூரிக்கு இருவரும் சேர்ந்தே செல்வோம், திரும்பி வருவோம், கடற்கரைக்குப் போவோம், பொதுக் கூட்டங்களில் உட்காருவோம், பத்திரிகை படிப்போம், நாட்டு வளப்பங்களைப் பேசுவோம். ராமு திலகர், பால், லாலாஜி போலே தன்னை நினைத்து விடுதலை முழக்கம் செய்வான். இருவருக்கும் ஷேக்ஸ்பியர் பைத்தியம். அந்த ஆண்டு பி. ஏக்கு ஹாம்லெட், ஒதெல்லோ இரண்டும் பாடம். நாங்கள் கதவை மூடிக்கொண்டு அவற்றை நடிப்போம். ராமு ஹாம்லெட், நான் ஓர்பேலியா வாக நடிப்போம்.

ஷேக்ஸ்பியரும், மில்டனும், ஷெல்லியும், பைரனும் அவன் நாவில் நர்த்தனம் செய்வர். எதிரிகளுக்கு ஊசி மிளகாய் மாதிரி சுரீரென்று உறைக்கும்படி வார்த்தை சொல்லுவான். ராமுவின் அழகான ஆங்கிலத்தைக் கேட்கவே நண்பர் அவன் வாயைக் கிளப்புவர். "நவநாகரிகம், நகர வாழ்வு, சர்க்கார் வேலை," என்றால் ராமுவுக்கு மகாகோபம் வரும்.

(312-ம் பக்கம் பார்க்க)

ஹரிஜனங்களின் :
: மனப்பான்மை

(ஸ்ரீ வே. கேசவலு, சாரணர், அண்ணாமலை சர்வகலாசாலை)

மேல் நாட்டு நாகரீகம் என்ற குட்டையில் ஊறின மட்டையாகிய நான் நல்ல உடையில் போகிறேன். அந்த உடை கதராலானதால் தேசியசாரம் ஊறின உடம்பென்பதில் மனம் ஆறினேன். நடக்கவே முடியாமல் (தேக அசௌகரியத்தினாலல்ல) அவ்வளவு கரடு முரடாகவும் ஒரே சேறாகவுமிருக்கின்ற அந்தப் பாதையில் எப்படித்தான் அந்த ஹரிஜனங்கள் நடந்துபோகிறார்களோ! அந்தக் கரடு முரடான பாதையிலிருந்து சிறுவழி ஒன்று சேரிக்குச் செல்கிறது. சேரியினருகில் வந்து விட்டோம். அந்தச் சமயத்தில் ஒரு ஸ்திரீ—அவளை வருணிக்கவே என் மனம் பதறுகின்றது—தன்னுடைய வெறும் எலும்புக்கூடாகிய குழந்தையை எடுத்துக்கொண்டு வெளியில் வந்தாள். இதற்குள் நாங்கள் அவளருகில் போய் விட்டோம். வெய்யிலில் வாடி உணவின்றி கருநிறமான மெலிந்த அவள் முகத்தில் கூட மாறுதலைக் கண்டோம். எங்களைப் பார்த்தது தான் தாமதம், அலறி அடித்துக்கொண்டு குழந்தையை இறுக்கிப் பிடித்துக்கொண்டு ஓடி விட்டினுள் நுழையக் குனிந்தாள். கூரைக் கீத்துகளெல்லாம் சிதறியிருந்த அவ்வீட்டில் நீட்டிக்கொண்டிருந்த மூங்கில் ஒன்று அவள் தலையில் மோதிற்று. அவளைப் பின் தொடர்ந்த என் மனம் அப்படியே சமைந்து விட்டது.

பாவம்! ஏன் அவள் அப்படிப் பயப்படுகிறாள்? நாம் ஏன் புலியைப் பார்த்ததும் ஓட்டம் பிடிக்கிறோம்? ஆமாம். நாம் அவர்களுக்குப் புலிதான். ஏ நாகரீகமே! ஏ பணப்பேயே, நீ யல்லவா அவர்களை அவ்வளவு மோசமான ஸ்திதிக்குக் கொண்டு போகிறாய்! ஏ பணமே! நீயல்லவா சுய நலத்திற்கு அரசனாய் இருக்கிறாய். பயத்தை ஒழிப்பதற்குப் பணம் ஒழியவேண்டும். பணம் ஒழிவது முடியாத காரியம். எனவே பணம் யாவரிடமும் நிரவியிருக்க வேண்டும். அதற்கு அவர்கள் முன்னேற வேண்டும்.

மனிதர்கள்தான் இவர்கள் என்று அவர்கள் தெரிந்துகொள்வதற்குப் பத்து நாட்கள் பிடித்தன. நாங்கள் அடிக்கடி சேரிகளுக்குப் போய் வந்ததால் பழக்கப் பட்டு விட்டார்கள்.

* * *

"நீங்க ளெல்லோரும் சுத்தமாய் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் உங்களுக்கு வியாதிகள் வராது. அப்படி வந்தாலும் சீக்கிரமாய்ப் போய்விடும்," என்று சொல்லிக்கொண் டிருக்கிறேன். தன் தாயின் துணியைப் பிடித்துக்கொண்டிருந்த ஒரு சிறு குழந்தை நானும் மனிதன் தானே என்று என்னருகில் வந்து காற்றில் பறந்த என் துணியைத் தொட்டது.

"சீ, அங்க போலாமா நீ. அவங்களைத் தொடக்கூடாது. அப்பாலவா" வென்று இழுத்தாள்.

நாம் அவ்வளவு பாபிகளா? ஒரு குழந்தை நம்மை தொடக்கூடாத அத்தகைய பாவமா செய்தோம்? குழந்தையின் ஸ்பரிசத்திற்காக எத்தனையோ பேர் ஆவலுடன் கடவுளை வேண்டுகிறார்களே... என்னை அறியாமல் குழந்தையைக் கையில் எடுத்துக்கொண்டேன்.

"நீங்கள் தொடக்கூடாது. நாங்கள் தாழ்ந்தவர்கள், ஈன சாதியார் என்று ஒன்றுமறியாக் குழந்தைக்கும் கற்பிப்பதால்தான் குழந்தைகள் வளர்ந்தபின் எங்களைத் தொடவோ நெருங்கவோ பயப்படுகின்றன" என்றேன்.

நான் குழந்தையைத் தொட்டதும் அவர்களுக்கெல்லாம் தூக்கி வாரிப் போட்டது. அதோடு தீண்டாமை பறந்து விட்டது.

* * *

நாளைக்குத் தீபாவளி. நாம் எவ்வளவு ஆனந்தத்துடன் இருக்கிறோம். நன்கு

எண்ணெய் ஸ்னானம் செய்துவிட்டுப் புதிய துணிகள் கட்டிக்கொண்டு மூடத்தனமாய்க் காசை ஆனந்தமாகக் கரியாக்கி விடுகிறோம். அவர்களும் மனிதர்கள் தானே. அவர்களுக்கு நம்மாலான சிறு உதவி செய்வோம் என்று எண்ணி நல்லெண்ணெய், அரப்பு, சில தின்பண்டங்கள் இவைகளுடன் சேரிக்குப்போனோம். மாலை 5 மணியிருக்கும். என்றுமில்லாமல் அன்று யாவரும் வீட்டிலிருந்தார்கள். ஒரு வீட்டில், "யாரது?" என்றோம்.

"என்னுங்க?" என்று குரல் வந்தது.

"எண்ணெய், அரப்பு எல்லாம் வேணுமா உங்களுக்கு? நாளைக்கு தீபாவளியாச்சே?" என்றோம்.

"எங்களண்ட காசு இல்லையே!" என்றான்.

"காசு வேண்டியதில்லை இனுமாகத் தாரோம்" என்றோம்.

"எங்களுக்கு எனுமா எதுவும் வேணுஞ் சாமி" என்று சொல்லிக்கொண்டே வெளியில் ஒரு நடுத்தர வயதுடையவனும் ஒரு ஸ்திரீயும் வந்தார்கள்.

உண்மையில் நாங்கள் கைகளில் எண்ணெய் முதலியன வைத்திருந்ததைக் கண்டு "ஏஞ்சாமி எங்களை யெல்லொம் கொண்ணுடவா சாமி எனமாதாரேன்றிங்க" என்றாள். உண்மையில் எங்கள் உயிரை அவள் வார்த்தை கொன்று விட்டது.

"அந்தப் பாவம் எங்களுக்கு என்னத்துக்கு? நாளக்கித் தீபாவளியாச்சே, நீங்கள் இவ்வளவு ஏழைகளாய் இருக்கிறீர்களே, எப்படி எண்ணெய் வாங்கித் தலை முழுவப் போகிறீர்கள் என்று எங்களாலானதைக் கொடுக்கலாம் என்று வந்தோம்" என்றோம்.

"உஹூம்...ம். எங்களுக்கு எனுமா வேணுஞ்சாமி" என்று போய்விட்டார்கள்.

எங்களை இதற்கு முன்பே அடிக்கடி பார்த்திருந்த ஒருவன் வந்து அவர்களுக்கு எடுத்துச் சொன்னான். முதலில் அவன் தலையில் தேய்த்துக்கொண்டான்.

பிறகும் அவர்களுக்கு நம்பிக்கையில்லை. மாதிரி பார்க்க ஒரு பெரியவர் கையில் வாங்கி முகர்ந்து பார்த்துவிட்டு. "அடடா! நல்ல எண்ணெ கம கமண்ணு வாசம் வருது" என்று சொன்னபின் தான் அவர்கள் வாங்கிக்கொண்டார்கள்.

இனுமாகத் தருகிறோம் என்று சொன்னாலும் பிறர் சொத்து நமக்கேன் என்ற சுத்தமான மனதுள்ள அவர்களுக்கல்லவா நாம் அடிமைகள்? இனுமாக ஒருவன் பலனில்லாமல் தருவானா என்று எத்தனை யோசனை செய்கிறார்கள்? தர்மம் என்பது அவர்கள் பால் யாராவது செய்திருப்பார்களா? இவ்வளவு பிரியமாக அவர்களிடம் யாரும் இருந்திராததால் தானே அவ்வளவு சந்தேகப் படுகிறார்கள். மனம், வார்த்தை, செய்கைகளெல்லாம் தூய்மையாயுள்ள அவர்களல்லவா எல்லோருக்கும் உயர்ந்தவர்கள்!

(310-ம் பக்கத் தொடர்ச்சி)

"கிராம வாழ்வு, கீதா மார்க்கம், விடுதலை" இவையே அவன் பல்லவி. யாராயினும் நெற்றிக்கில்லாமல், சந்தி ஜபத்தை நிந்தித்துக்கொண் டிருப்பதைக் கேட்டால் போதும். அவனுக்குத் தெரிந்தது கீதையில் 100 சுலோகங்களும், சந்தியா மந்திரங்களுந்தான். அவற்றை வைத்துக் கொண்டு சாட்டை வாங்கு வாங்குவான். எதிரி "ஐயோ இனிமேல் சொல்லவில்லை, அபராதம்" என்று கன்னத்தில் அடித்துக்கொண்டு நெற்றிக்கு இட்டுக் கொள்ளுமட்டும் விடமாட்டான். ஈட்டி, கத்தி, துப்பாக்கி, குண்டு எல்லாம் தாண்டி டம்டமார் வேட்டுமாதிரிப் பறியும் அவனது சூடான வார்த்தைகள். ஆதலால் ஜி. டி. ராமுவை "அதிர்வேட்டு ராமு" என்று எல்லாரும் பின்னால் பரிகாசம் செய்வர்; முன்னால் அல்ல. நான் மட்டும் எனது ராமுவை "அன்பு ராமு" என்றழைப்பேன்.

டாக்டரின் மனைவி

(ஸ்ரீ. ஸு. சேதுராமன்.)

சாம்பிராணிப் புகை போல, எங்கு பார்த்தாலும் பனி மோடம் போட்டிருந்தது. குளிர் தாங்க முடியவில்லை.

ராத்திரி பத்து மணியாகியும் அவர் திரும்பிவரக் காணோம். வேலைக்காரக் குப்பனுடன் பேசிக்கொண்டே அத்தனை நேரம் காத்திருந்தாள். வீட்டுக்குள்ளேயே அவ்வளவு குளிர் என்றால் வெளியில் போயிருக்கும் தன் கணவருக்கு எப்படி நடுக்கித்தள்ளும் என்பதை நினைத்துப் பார்க்கக்கூட அவளுக்குப் பயமாக இருந்தது.

"ஐயோ, தலைவிதி! படவேண்டிய நரக துக்கங்களெல்லாவற்றையும், டாக்டர் பரீக்ஷை கொடுத்து விட்டால், இங்கேயே பட்டுவிடலாம். வேளா வேளையில் சாப்பாடில்லை, தூக்கமில்லை......மனசு ஸந்தோஷமாக இருக்கவே கட்டோடு வழியில்லை......அப்பாடா என்று களைத்துப் போய்ச் சற்று கண்ணயறும் சமயம் பார்த்து 'டாக்டர் ஐயா'வைத் தேடிக் கொண்டுவந்து யமபடர்கள் மாதிரி யாராவது வாசல் கதவைத் தட்டுகிறார்கள். பாதிச் சாப்பாட்டில் எழுந்து ஓடவேண்டியிருக்கிறது......பகவானே! டாக்டர் பொழப்பு என்றால் நாயைப் போல உழைத்து யந்திரம் போலச் சுழன்று கொண்டேயிருக்க வேண்டியதுதானே!" ...என்றெல்லாம் மனதை மேலும் மேலும் அலட்டிக் கொண்டாள்.

டாக்டர் ஸர்வோத்தமன் திரும்பிவரும் போது பதினோரு மணியிருக்கும். மிகவும் களைத்துப் போயிருந்தமையால், உடுப்புக்களைக் கூடக் கழற்றாமல் படுக்கையில் போய்ப் படுத்துக் கொண்டு விட்டார்.

ஸரஸுவின் கண்களில் வெறித்த பார்வைதான் சற்று நேரத்துக்கு இருந்தது. அவளையறியாமல், கண்களில் நீர் பிரவஹித்துக் கன்னங்களின் வழியே வழிந்தது. அவள் அப்படியே சுருண்டு படுத்து விட்டாள்.

குப்பன் விளக்குகளை எல்லாம் 'சிறுசு' பண்ணி, வாயிற் கதவுகளைத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு, ரேழித் திண்ணையில் படுத்துக் கொண்டான்.

அன்று இரவு எல்லோரும் பட்டினி.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வாழைக் குறிச்சி ஆஸ்பத்திரிக்கு ஸர்வோத்தமனை மாற்றிக் கொஞ்ச நாட்கள் தான் ஆயிருந்தன. சுற்று வட்டத்தில் பத்து மைல் தூரத்துக்குள் வேறு ஆஸ்பத்திரிகளே கிடையாது. ஆகையால் ஜனங்கள் வெகு ஆவலுடனும், பயபக்தியுடனும், ஆஸ்பத்திரிக்கு வந்து மருந்து வாங்கிச் செல்வார்கள்.

அடிக்கடி பக்கத்துக் கிராமங்களிலுள்ள 'பெரிய மனுஷர்கள்' திடீரென்று கூப்பிட்டனுப்பிப்பார்கள். ஸர்வோத்தமன் அவசர அவசரமாகத் தம்முடைய மோட்டார் காரில் பறந்து போவார். 'என்னவோ ஏதோ, நாம் தாமதிக்கக் கூடாது' என்று அவர் மனது அடித்துக் கொள்ளும். ஆனால் அங்கே சென்றவுடன் பெருத்த ஏமாற்ற மடைவார்.

"குழந்தைக்குக் கையில் சிராய்த்துவிட்டது...இத்தனை நேரம் துடித்துக்கொண்டே இருந்தது குழந்தை..." என்று சாவதானமாக விஷயத்தைத் தெரிவிப்பார்கள்.

இதே மாதிரி அநுபவங்கள் டாக்டர் ஸர்வோத்தமனுக்கு எவ்வளவோ தடவைகளில் உண்டாகி யிருக்கின்றன. இருந்தாலும் பின்னால் தம்மீது யாரும் குறை சொல்ல இடம் வைத்துக் கொள்ளக் கூடாது என்பது அவருடைய ஸித்தாந்தம். அதன்படியே தான் அத்தனை நாட்களையும் கழித்திருந்தார்.

ஸரஸுவின் பிஞ்சுமனம் எங்கெல்லாமோ சுற்றி அலைந்தது. 'டாக்டர் வேலைக்குத் தலைமுழுகி விட்டு எங்காவது ஓடிப்போய்விடலாம்' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டாள். இதற்கு முந்தி,

அவரை அழைத்துப்போக வந்திருந்த இரண்டு மூன்று பேர்களின் முகங்கள், பனிப்படலத்தில் நக்ஷத்திரம் தோன்று வது போல, லேசாகத் தோற்ற மளித்தன அவளுடைய மனக் குகையில். "மூஞ்சியைப் பாரு! மரநாய் மாதிரி! சீ...மனுஷனுக்குச் சற்று நேரம் கூட ஒய்வு கொடுக்க மாட்டார்களா?" என்று பற்களைக் கடித்துக் கொண்டாள்.

வெகுநேரம் வரை இதே அவஸ்தை தான், தூக்கமே வரவில்லை. அவள் கைவிரல்களைச் சொடுக்கிக் கொண்டதும், சில தடவைகள் பெருமூச்சு விட்டுக் கொண்டு 'ஈச்வரா!' என்று சொல்லிக் கொண்டதும், அவள் தூங்கவில்லை என் பதைக் காட்டின.

கடிகாரத்தில் மணி இரண்டு அடித்தது, அவள் காதில் நன்ருக விழுந்தது. 'கொசுப் பிடுங்குகிறது' என்று அரைத் தூக்கத்தில் ஸர்வோத்தமன் சொல்லிக் கொண்டார்.

'கொசுவாவது தேவலையே...இவாள் பிடுங்கல்களைக் காட்டிலும்!' என்று ஸரஸூவின் மனசு அநுவாதம் செய்தது.

சற்றுநேரம் கழித்துத் தூத்தல் போடுவது போன்ற சத்தம் கேட்டது. கதவைத் திறந்து, வெளிப்புறமாக இருந்த ஜன்னல் கதவைச் சாத்திவிட்டு மறுபடி உள்ளே வந்து படுத்துக் கொண்டாள்.

'டட்...டட்...டட்...டட்'......யாரோ வாயிற் கதவைத் தட்டினுர்கள்.

"சனீச்வரன் வந்து விட்டானு?"

குப்பன் கதவைத் திறப்பதற்குள், ஸரஸூ மாடி ரூமிலிருந்து கீழே இறங்கி வந்து விட்டாள்.

"யாரது?"

"தேவனுசேரியுங்க...ஐயாவைக் கூட்டிக்கினு போகனும்...ரொம்ப அவசரங்க..."

"இருட்டிலே இரண்டு மைல் எப்படிடா வருவாரு ஐயா?" என்ருன் குப்பன்.

"இல்லே...பின்னுலே வண்டி வருது. நான் பறந்துக்கினு முன்னுடி ஓடியாரேன்."

"என்னடா அப்படி ஆபத்து வந்துட்டது?"

"திடீரினு குழந்தை பேத்துது.... நெருப்பைக் கூட மிரிச்சிடலாம்...அவ்வளவு கொதிக்குது உடம்பு...எந்திரிச்சி ஓடுது...மனசு பக் பக்குன்னு அடிச்சுக்குது...மவராசா கிட்டே ஜல்தியாச் சொல்லுங்க...."

அவன் கால் கைகள் எல்லாம் நடுங்கின. பறவைப் பறந்தது மனது.

ஸரஸூவுக்கு ஒன்றும் புரியவில்லை. 'ஹூம்! கிருகசாரம்' என்று சொல்லிக் கொண்டே ஸர்வோத்தமனிடம் தெரிவிக்க வந்தாள்.

அவர் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார். அவரை எழுப்புவதற்காகக் கம்பளியைக் கொஞ்சம் விலக்கி, அவருடைய முதுகுப்புறம் மிருதுவாகத் தொட்டு அசைத்தாள். அவளுக்குப் பகீரென்றது. அவர் உடம்பு சுட்டது!

இரண்டு நிமிஷங்கள் வரை ஸ்தம்பித்து நின்ருள். பிறகு கீழே இறங்கிப்போனுள்.

"பயப்படாமல் இருக்கச் சொன்னுக. 'ஒண்ணும் பிரமாதம் ஆகிவிடாது; நான் விடியற் காலையில் வருகிறேன்' என்று சொல்லச் சொன்னுக ஐயா....இப்படியே குப்பனுக்கு அருகில் படுத்துக்கொள் 'கருக்கல்லே' அழைத்துக் கொண்டுபோகலாம்" என்று சொன்னுள்.

"தாயி,...ஒரே குழந்தையுங்க...பெஞ்சாதி கூடச் சீக்குக்காரி. அவள் மனசு இப்பவே இடிஞ்சுபோய் உட்கார்ந்திருக்கா...புண்யவதீ, நீங்க போய்ச்சொல்லுங்க..."

அதற்குள் இரட்டை மாட்டு வண்டி ஒன்று வாசலில் வந்து நின்றது. "அம்மணீ..." என்று கெஞ்சும் பாவனையில் வீட்டு யஜமானியைப் பார்த்தான் வந்த ஆஸாமி. அவன் கண்களில் ஒளியே இல்லை. முகம் சோர்ந்து வெளுத்துப் போயிருந்தது, பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

ஸரஸூவுக்கு யோசனைகளே ஓடவில்லை. கால்மணி நேரம் மௌனமாகவே நின்று கொண்டிருந்தாள். "தாயே...!' என்று மறுபடியும் ஏங்கிய குரல் கேட்கவே, அவள் வேண்டா வெறுப்பாக, "அப்படியானுல் சிறிது நேரம் இரு" என்று சொல்லிவிட்

டுத் தள்ளாடிக்கொண்டே படுக்கையறைக் குச் சென்றாள்.

ஸர்வோத்தமனை எழுப்ப அவள் கைகள் நடுங்கின. இருதலைக் கொள்ளி எறும்பு என்பார்களே, அது போல அவ ளுடைய மனதும் ஊசலாடியது. அரை மணி நேரம் வரையில், எழுப்ப மனம் வரா மல் தயங்கித் தத்தளித்தாள்.

"அம்மா....!" என்று பயத்தால் நடுங் கும் குரல் மறுபடி கேட்டது.

"இரு. இரு...வராக!" என்று. மாடியி லிருந்தபடியே ஸரஸு பதிலளித்தாள்.

கடைசியில் எப்படியோ துணிந்து அவரை எழுப்பிவிட்டாள். டாக்டருக்கு என்ன விஷயம் என்று தெரிவிக்கப் படவே, அவர் அவசர அவசரவாக எழுந் தார்.

"வந்து எத்தனை நாழிகை இருக்கும்?" என்று பரபரப்புடன் கேட்டார்.

"இல்...லே...ரொம்ப நாழிகை இராது ..." என்று மழுப்பினள் ஸரஸு.

கம்பிளியைப் போர்த்துக்கொண்டு, தம் முடைய தோல்ப்பையுடன் வேகமாகக் கிளம்பி விட்டார். அவளிடம் சொல்லிக் கொள்ளக்கூட இல்லை. வண்டியில் ஏறி உட்காரும் போது மணி நான்கு அடித் தது. "ஐயா, ஏறும்போது மணி யடிக்குது ...கட்டாயம் குழந்தை பிழைச்சூடும்...' என்று சொன்னபொழுது தன்னையறியா மல் வண்டிக்காரனுக்கு ஓர் ஆறுதல் உண் டாயிற்று.

மாடுகள் பறந்தன. வெகு சீக்கிரத்தில் மையிருட்டுப் பாதையில் பாய்ந்து, கந் தப்பா மேஸ்திரி வீட்டு வாயிலில் வந்து நின்றன. வாசல் திண்ணையில், கவ லையுடன் டாக்டர் வரவை எதிர்பார்த்து எதிர்பார்த்து அலுத்துப் போயிருந்த முத்தாயிக்கு, ஸர்வோத்தமனைக்கண்டதும் அழுகை வந்துவிட்டது.

"குழந்தையை உங்க கையிலே கொடுத் தாட்டேன்...நீங்க தான் சாமி உசிர் கொடுக்கணும்...!" என்று புலம்பினள்.

டாக்டர் குடிசைக்குள் நுழைந்தார். மங்கலாக எரிந்து கொண்டிருந்த பெட்ரூம் விளக்கடியில் ஐந்து வயதுக் குழந்தை படுத்துக் கிடந்தது. அருகில் செல்லும் போதே அனல் வீசியது. தர்மாமீடரை எடுத்து டெம்பரேசர் பார்த்தார் டாக்டர். 105.5 டிகிரி இருந்தது.

திடீரென்று குழந்தையின் மூடிய கண் கள் ரத்தத்தைக் கொப்புளித்தன. முகத் திலுள்ள தசை நார்கள் முறுக்கிக் கொண் டது பயங்கரமாக இருந்தது...ஸர்வோத் தமன் குழந்தையின் பக்கத்தில் உட் கார்ந்து கொண்டார்.

"வருகிறவன் இன்னும் அரைமணி முன் னடி வந்திருந்தால் என்ன கேடு?...மூச் சுக் கட்டிப் போகிற சமயத்தில், வீட்டு வாசலில் வந்து கூப்பாடு போடுகிறது! சை!" என்று நொந்து கொண்டார்.

"சாமி...குழந்தை பிழைச்சுக்குங் களா?" என்று கவலை தோய்ந்த துவனியில் கேட்டாள் முத்தாயி.

சற்று நேரம் எல்லோரும் மௌனமா கவே இருந்தனர்.

"இப்போது மருந்து கொடுத்து விட் டுப் போகிறேன். ஐயனுரை நினைத்துக் கொண்டு அதைக் கொடுத்துப்பார். பிறகு அதிர்ஷ்டம் எப்படியோ,அதன்படி நடந்து விட்டுப் போகிறது. வேறு நான் என்ன சொல்லமுடியும்?" என்று அஸ்வாரஸ்யப் பட்ட தோரணையில் பதில் சொன்னர் ஸர்வோத்தமன்.

"...எதற்கும், எப்படி யிருக்கிறது என்று காலையில் என்னிடம் வந்து சொல்லு. அப்பொழுது மறுபடியும் இங்கே வருகிறேன்" என்று சொல்லி விட்டு வெளியே வந்தார்.

குழந்தை மண்டையைத் தலையணையில் உருட்டிக் கொண்டது. கொஞ்சநஞ்சம் இருந்த நம்பிக்கையும் போய்விட்டது முத்தாயிக்கு.

ஸர்வோத்தமன் திரும்பிவரும் போது ஐந்தரை மணி இருக்கும். அப்படியே போய்ப் படுக்கையில் படுத்துக்கொண்டார். மனோலோகத்தில் சுற்றிக்கொண்டிருந்த ஸரஸு எழுந்து, அவர் மேல் கம்பிளியை நன்றாக இழுத்துப் போர்த்தினள்.

விடியற்காலை ஒன்பது மணியாகியும் மேஸ்திரி வரவில்லை. டாக்டர் உண்மை யாகவே வருத்தப்பட்டார். 'இப்படியெல் லாம் தங்களுடைய குயுக்திகளை வைத்திய விஷயத்தில் புகுத்திப் புகுத்தி வருவதால்

தான், குழந்தைச் சாவு அதிகரிக்கிறது...' என்று எண்ணினர்.

மத்தியானம் சாப்பிடும்போது அவருக்கு ஆகாரமே இறங்கவில்லை. ஏதோ கவலைப்படுபவர் போல் தோற்றியது.

"என்னவாவது உடம்பா?...சரியான படி சாப்பிடவே இல்லையே" என்று ஸரஸு கேட்டாள்.

"நேற்று ராத்திரி நாலு மணிக்கு வந்து கூப்பாடு போட்டானே...இன்னும் ஒரு மணி நேரமாவது முந்தி வந்திருந்தால், ஒரு உசிர் பிழைத்திருக்கும்...நினைத்துப் பார்த்தால் 'பாவமா'கத் தான் இருக்கிறது..." என்று ஸர்வோத்தமன்சொன்னர்.

ஸரஸுவுக்கு உடம்பை என்னவோ பண்ணிற்று. வயிற்றுப் புரட்டல் உண்டாகிவிட்டது. 'ஐயோ, அவன் இரண்டு மணிக்கே வந்தானே! அப்போதே பாவி, நான் எழுப்பாமல் போனேனே!...' என்று வருந்தினள்.

சாப்பாடு கசந்தது.பாதியில் அப்படியே எழுந்துவிட்டாள்.

என்ன தோன்றியதோ அவளுக்கு மொட்டை மாடியில் ஏறி, கிழக்கே கண்ணுக் கெட்டியதூரம் வரையில் பார்த்தாள். தேவணுசேரி ஆலமரத்தடியிலிருந்து, ஆகாயத்தை நோக்கிப் புகை கிளம்பிக் கொண்டிருப்பது தெரிந்தது.

ஸரஸுவின் கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் தெளும்பிற்று.

'கொலைகாரி!' என்று உதடுகள் சொல்லிக் கொண்டன.

மூன்னூராவது ஆண்டு விழா

சென்னை நகரம் ஆரம்பமான மூன்னூராவது ஆண்டு விழாவைக் கொண்டாடவேண்டுமென்று மும்முரமாக ஏற்பாடுகள் நடக்கின்றன. காரியம் இன்னும் முத்திப்போவதற்கு முன்பே அந்தக் கொண்டாட்டத்தின் அர்த்தமென்ன வென்பதை சற்று ஆராய்ந்து பார்ப்பது அவசியம்.

1639-ம் வருஷத்தில் ஈஸ்ட் இந்தியா கம்பெனி கீழக்கரையில் சந்திரகிரி அரசனிடம் சென்னப்பட்டணத்தில் பண்டகசாலை வைக்க அனுமதி பெற்றது. அதிலிருந்து முளைத்தெழுந்து பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் உற்பத்தியைத்தான் இதன் மூலம் நாம் கொண்டாடுவதாக ஆகும். அதன் சம்பந்தமான நடவடிக்கைகளில் நாம் கர்வத்துடன் கொண்டாடக் கூடியது என்ன இருக்கிறது? நமது தேசிய வாழ்விற்கு நமக்கு உற்சாகம் அளிக்கக் கூடியது அதில் என்ன இருக்கிறது? சொல்லப்போனல் நாம் சுதந்திரத்தை இழந்த இழிவான கதையில் அது ஒரு முக்கிய கட்டமாகத் தான் இருக்கிறது. ஆதியில் 'ஈஸ்ட் இந்தியா கம்பெனி லிமிடெட்' ஆக இருந்து இப்பொழுது 'பிரிட்டிஷ் சாம்ராஜயம் லிமிடெட்' ஆக மாறி யிருக்கும் ஸ்தாபனத்திற்கு மகிமை கொடுப்பதாகத்தான் ஆகிறது இந்தக் கொண்டாட்டம்.

* * *

சென்னை நகரம் ஆரம்பமானதற்காகத்தான் கொண்டாட்டம் என்று சொல்லலாம். அது தானு நோக்கம்? அப்படியானல் நிர்வாகஸ்தர்கள் அதை வியக்தமாகச் சொல்லவேண்டும். அப்படித்தான் இருக்கட்டும். சென்னைப் பட்டணத்தின் வளர்ச்சி எதைக் காட்டுகிறது?

ஆதியில் நாமும் நகரங்கள் படைத்திருந்தோம்—பிருமாண்டமான நகரங்கள். கடைகளும் கண்ணிகளும், கண்களைப் பறிக்கும் வகையில் இந்திய வியாபாரத்திற்கே கிடங்குகளாக இருந்தன அவைகள். முத்தும் பவழமும் தங்கமும் கடைத்தெருவில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. நவரத்தினங்களும் அங்குதான் குவிந்து கிடந்தன. அந்த நகரங்களின் மூலம் நம்மிடையே செல்வம் வந்து குவிந்தது. அவை மூலம் நமது செல்வம் செலவழிந்து வெளியே போகவில்லை. வெளியேயிருந்து வந்து கொட்டிய அஷ்ட ஐசுவரியங்களுக்கு அவை களஞ்சியங்கள் போல இருந்தன.

இன்றோ நமது நூதன நகரங்கள் மூலம் நமது செல்வம் வெளியேறிக் கொண்டே இருக்கிறது. இந்த மாதிரி நகரங்களின் உற்பத்தியை நாம் கொண்டாடக் கூடவா வேண்டும்?

—டாக்டர் பட்டாபி சீதாராமய்யர்.

புதுக்குடி வாழ்க்கை

(ஸ்ரீமதி சேது அம்மாள்)

வைகாசி மாதம். பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் மூடி ஒரு வார மாகி விட்டது. நடேசன் எஞ்சினீரிங் கல்லூரி மாணவன். விடு முறைக்கு வருஷா வருஷம் அவன் தகப்பனாரிடம் தான் போவது வழக்கம். ஆனால் இந்தத் தடவை தன்னுடைய சொந்த கிராமத்திற்குப் போகவேண்டு மென்று இச்சை யுண்டாயிற்று.

கிராமம் என்றால் அசல் கிராமம் புதுக்குடி. பாட்டனாரும் முப்பாட்டன்களுமாக நடேசனுக்குச் சேர்த்து வைத்த இருபது வேலி நிலமும் தோப்புத் துறவுகளும் சூழ விருப்பது தான் புதுக்குடி. பதினைந்து பிராமண வீடுகள் எண்ணினாற்ப் போல. அடுத்தாற் போல சிற்றாறு ஒன்று. அக்கரையில் குடியானவர்களின் கூரைக் குடிசைகள் ஐம்பது. சற்று எட்டி பள்ளத் தெரு. அங்கங்கே முட்டு முட்டாக சாணார்களின் பனை ஓலைக் குடிசைகள். இது தான் புதுக்குடி.

இவ்வளவு நாளாக இல்லாத ஆசை — ஊர் நினைவு — நடேசனுக்கு இப்போது வந்ததற்குக் காரணமில்லாமலில்லை. எங்கு பார்த்தாலும் கிராமப் புனருத்தாரணம், கிராம சேவை — இந்தப் பேச்சுகளே பிரதானமாக நடமாடுவதை அடிக்கடி கண்டும் கேட்டும் வந்ததிலே, அவனுக்கு சிறுவயதில் தான் ஓடி விளையாடின புதுக்குடி நினைவு வந்து விட்டது. காகிநாடாவிலே எஞ்சினீயராக இருக்கும் தகப்பனாருக்கு, தான் இந்த லீவுக்குக் கிராமத்திற்குப் போவதாயும் அங்கே வரவில்லையென்றும் கடிதம் எழுதி விட்டுப் புறப்பட்டான்.

சின்ன சேலத்தி லிறங்கி பனிரண்டு மைல் கட்டை வண்டிப் பிரயாணம் புதுக்குடி. முதல் நாளிரவு புறப்பட்டு மறுநாட் காலை ஒன்பது மணிக்கு ஊர் வந்து சேர்ந்தான். வண்டியை விட்டு இறங்கியதுமே, தான் ஐந்து வயதில் பிரிந்து போன பாட்டனார் திண்ணையில் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். கனவு கண்டது போல நினைவிலிருந்த அதே இடது புறத் திண்ணை; அதிலே மணை மீது உட்கார்ந்து ஜபம் செய்யும் தாத்தா! அன்று மாதிரியே மாறுதலறியாத, பிராதஸ் நானம், பட்டை பட்டையாக நெற்றியிலும் உடம்பிலும் விபூதிப்பூச்சு, கழுத்தில் ருத்திராட்சம், பஞ்சகச்சம், இத்தனை சிஷ்டா சாரத்தோடு 'அன்று கண்ட மேனி' யாக அவர் உட்கார்ந்து கையை உத்தரீயத்தில் மறைத்துக் கொண்டு ஜபம் செய்வதைப் பார்த்தான். வயதானதற்கு அடையாளமாக கண்பார்வை மட்டும் மங்கிவிட்டது கிழவருக்கு. புருவத்திற்கு உயரே இடது கையை மறைத்துப் படியேறி வரும் நடேசனைப் பார்த்து "யாரது?" என்றார்.

"நான் தான், தாத்தா, நடேசன்."

க்ஷணத்திலே மாறித் தெளிந்தது அவருடைய முகம். "நடேசனா! வாடாப்பா. நம்ம ஊரு, நம்மதாத்தானா, நினைவு வந்துதாடா பயலே! உட்காரு இப்படி!" என்றார். வெகுநாளாக உள்ளூரப் பாதித்துக் கொண்டிருந்த ஒரு நினைவு திடீரென்று எழுந்ததின் காரணமாகக் கண்களில் நீர் சுரந்தது. பேரனை அன்போடு தடவிக் கொடுத்துக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, உட்புறம் பார்த்து, "அடியே, குழந்தை நடேசன் வந்திருக்கான், வா!" என்று மனைவியை அழைத்தார்.

எதிர் பாராமல் ஏற்பட்ட சந்தோஷத்தால் அவருடைய நீர் கம்மிய குரலில் சற்று நடுக்கம் கூட இருந்ததைக் கவனித்தான் நடேசன்.

காலக்கொடுமையால் அவனுடைய தகப்பனாருக்கும் தாத்தாவுக்கும் பேச்சு வார்த்தை, போக்கு வரத்துக் கிடையாது பதினைந்து வருடங்களாக. தாயாதிகள் போல அவர்களிடையே ஆறாத வர்மமிருந்தது. அன்று ஒரு நாள் நடந்த சண்டை, சபதம், எல்லாம் நடேசனுக்கு இன்று சட்டென்று நினைவு வந்தது.

அந்த சண்டைக்குத் தன் தாயார்தான் காரணமாயிருந்தாள் என்பதும் அதனோடேயே எழுந்தது. பெரு மூச்சு விட்டான்.

பாட்டி வந்தாள் அதற்குள். "நடேசம்' என் கண்ணே, வந்தியாடப்பா!" என்று சந்தோஷத்தால் கூவி விட்டாள்

நடேசனுக்கும் மனம் கலங்கி விட்டது. "ஆமாம் பாட்டி!" என்றான். நடேசன் கண்ணைத் துடைப்பதைப் பார்த்து அவனுடைய பாட்டி, "ரத்த பாசம்னா ஆட்றது இப்படி! உனக்கா வயசு வந்து புத்தி தெரிஞ்சு ஒரு நாள் வருவையான்னு ஈசுவரனை வேண்டினேண்டாப்பா! வா, எல்லோரும் உள்ளே போவோம்!" என்றாள். உள்ளே போனார்கள்.

நடேசனும் போனான். புது விதமான ஒரு நிம்மதி உண்டாயிற்று அவனுக்கு. நெடு நாளைக்கு முன் இழந்து போன ஒரு செல்வாக்கு அவனை வந்து அண்டி அவனுக்கே தெரியாமலும், விளங்காமலு மிருந்த ஒரு மனக் குறையை நிறைவித்து ஆச்வாசப்படுத்தியது போலிருந்தது அவனுக்கு. பெரியோர்களின் அன்புக்கு இவ்வளவு மஹிமையா இருக்கிறது!

இப்படி வியந்துப்போய், "தாத்தா, முன்னேயே என்னை வரச்சொல்லி எழுதப்படாதா, வரமாட்டேனா நான்?" என்றான்.

"அப்பா, எல்லாம் ஈச்வராக்னை. நம்ம இச்சை ஒண்ணுமில்லே. நல்லகாலம் வரும்போது வரட்டும்னு அப்படிப் போயிடுத்து மனஸு!" என்றார் அந்த அனுபவ வேதாந்தி.

கூடத்தில் ஒரு புறம் ஒரு தாழம்பாயின் மீது உட்கார்ந்தபடி ஒரு பெண் ராட்டினத்தைச் சுழற்றி நூற்றுக் கொண்டிருந்தாள். வந்திருப்பது யாரென்று அவளுக்குத் தெரியாது. அவள் விசாரிக்கவுமில்லை. நடேசன் "ஏன் தாத்தா இது யாரு?" என்று கேட்டான்.

"உங்க பெரியத்தை ஞானத்தின் பொண். பார்வதி, உங்க அம்மாஞ்சியாக்கு மிவன்!" என்றார் தாத்தா.

"அம்மாஞ்சிப் பட்டம் எனக்கு வேண்டாம்!" என்றான் நடேசன் சந்தோஷத்துடன்.

"அவ பின்னே எப்படிக் கூப்படறது உன்னை?" என்று கேட்டாள் பாட்டி.

உடனே பார்வதியைப் பார்த்து, "பார்வதி. உலைநீர் ஜலம் தளைக்கிறது. பொடி போட்டு இரண்டு கரண்டி ஜலம் விட்டு காபிபோட்டுக் கொண்டா நடேசனுக்கு!" என்று உத்தரவிட்டாள்.

காபி கொண்டுவந்து வைத்தாள் பார்வதி; நடேசன் சாப்பிட்டான். "பட்டணத்திலே காபி நன்னாயிருக்குமாடா?" என்று விசாரித்தாள் பாட்டி.

"இருக்கும் சுமாராக. ஆனால் இப்படியிருக்குமா?"

"சரி, சட்டுனு சமைக்கிறேன். உனக்குப் பத்துமணிக்குள்ளே சாப்பிட்டு வழக்கம். பார்வதி குளிக்க வெந்நீர், போடு" என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள்.

"வேண்டாம். ஹாய்யா ஓடற ஜலத்திலே குளிக்காமல் இங்கே வந்தும் வெந்நீரா?"

"உடம்புக்கு ஆகுமோ?" என்றார் தாத்தா.

"ஒண்ணும் வராது" என்று சொல்லிவிட்டு வாசலில் வந்து நின்றுகொண்டு இங்கு மங்குமாகப் பார்த்தான் நடேசன்.

அப்போது ஒரு கோரைப் பாயை நடுவாசலில் கொண்டுபோட்டாள் பார்வதி.

"என்ன உலர்த்தப்போகிறாய்?"

திண்ணைமேலிருந்த பெஞ்சுமீது ஒரு மூட்டை யிருந்தது. அதன் அருகில் சென்று, "சொல்லுகிறேன்! இதை ஒரு கை பிடிக்கமுடியுமா?" என்றாள் பார்வதி.

ரொம்பநாள் பழகியதுபோல சுவாதீனமாக அவள் பேசியதைப் பார்த்து அவன் வியப்புற்றான். இருவருமாக மூட்டையைப் பிடித்துக் கொணர்ந்தார்கள்.

அதை அவிழ்த்துக் கொட்டினாள் பார்வதி அது தேங்காய்ப் பருப்பு. துளாவிக்கொண்டே "என்ன பார்க்கிறேள். சுற்றுமுற்றுமாக, அம்மாஞ்சி, பட்டிக்காட்டுக்கு ஏன் வந்தோம்னா?" என்று கேட்டு விட்டாள்.

சற்று நாழி வரை ஆச்சரியத்தால் நடேசன் பேசவில்லை. அவள் பிறகு "ஒஹோ, மறந்துபோச்சு. இனிமேல் அம்மாஞ்சின்னு கூப்பிடலே" என்று சொல்லி விட்டு உள்ளே சென்றுள்.

நடுப்பகலாயிற்று. சாப்பிடும்போதுதான் வந்ததின் காரணத்தையும், இனி தனக்கு உத்தியோக ஆசையில்லையென்றும் அங்கே தான் இருக்கப் போவதாயும் தாத்தாவிடம் சொன்னுன்.

"பழசெல்லாம் இனிமேல் புதிசுதான்! பட்டணவாசம் என்னசுகம்? என்ன சம்பாதித்தாலும் எல்லாரும் வத்தல் மாதிரி ஒட்டி உலர்ந்துதான் இருக்கா. சிவனேன்னு பண்ணையைப் பார்த்துக்கிண்டு ராஜா வாட்டமாயிரு" என்று ஆமோதித்தாள் பாட்டி.

ஒவ்வொன்ருக நாட்கள் சென்றன. ஒரு வாரமாகிவிட்டது. இதற்குள் பார்வதி அவனுடன் ஒன்ருகப் பழகிவிட்டாள். பொழுது போகவில்லை யென்பதே யின்றி அவள் ஒரு துணையாளுள் அவனுக்கு. ஒருநாள் மத்தியானம் பொழுது போக்குக்காக கூடத்திலிருந்த அலமாரியைத் திறந்து அதிலிருந்த புஸ்தகங்களை யெல்லாம் பார்த்தான். எல்லாம் வாரமாத வெளியீடுகளான பத்திரிகைகள். எல்லாம் முக்கியமானவைகளா யிருந்தன. அப்போது அங்கே வந்தாள் பார்வதி.

"உனக்கு ஏதாவது காரியமிருக்கிறதா பார்வதி?"

"இல்லை. ஏன்?"

"இல்லை யென்ருல் வா. சற்றுநாழி பேசலாம்" என்று சொல்லி உட்கார்ந்தான்.

"நீ இங்கேவந்து எவ்வளவு நாளாச்சு?"

"ஆறுமாச மாச்சு. இத்தனைநாள் கூட ஊரிலே அம்மாவிடம் தான் இருந்தேன் படித்துக்கொண்டு."

"படிப்பை ஏன் நிறுத்திவிட்டாய்?"

"வேண்டா மென்றுதான்!"

"நீயாகவா?"

"ஆமாம்."

"மேலே படிக்க ஆசையில்லையா?"

"இல்லை."

"ஏன்?"

"இதெல்லாம் என்ன கேள்வி? இதற்குத்தான் உட்காரச் சொன்னேளா?

"பார்வதி, நான் கேட்டதற்கு பதில் சொல்ல மாட்டாயா?"

"என்ன?"

"இவ்வளவு புத்திசாலியான நீயேன் படிப்பை நிறுத்திவிட்டாய்?"

"தெரியாததையா நான் சொல்லப் போகிறேன்? காலேஜ் படிப்பாலே என்ன உபயோகம்? பணவிரயமும் காலவிரயமும் செய்தும் கூட நமக்கு—நமது வாழ்க்கைக்கு—முக்கியமாக என்ன இருக்கிறது அதில்?"

"ஒன்றுமில்லாமல் தான் எல்லாரும் படிக்கிருர்கள்!"

"எல்லாரையும் பற்றிய கவலை எனக்கேன்? நான் படிக்கவில்லை யென்றுதான் அப்பாவுக்கு கோபம். முக்கியமாக அதற்காகவே தான் இங்கே கொஞ்சநாள் இருக்கலாமென்று வந்தேன். புராதனமான வழியில் எனக்கு ரொம்ப ஆசையிருக்கிறது. எழுதப் படிக்க மோசமில்லாமல் இங்கிலீஷ் தெரிகிறது போதும்."

"உன்வரை சரிதான். உன் தகப்பஞர் உத்தேசித்த பிள்ளைக்கு படித்த மனைவி வேண்டுமென்ருல்?"

"படித்தமனைவியைத் தேடி யடையட்டுமே!"

"சபாஷ்! நன்ருகப் பேசுகிருய்! உனக்குப் புருஷன் எப்படி யிருக்கவேண்டும்? சொல் பார்ப்போம்!"

கலகல வென்று சிரித்தாள் பார்வதி. உடனே, "ஏன்? ஏதாவது வரன் தேடித் தரப்போகிறீர்களா?"

"தேடித்தர பாத்யமில்லையா? அல்லது நானேதான்—"

பார்வதி அவன் சொன்னது பூராவையும் கேட்கவில்லை. உள்ளே ஓடிப்போய் விட்டாள்.

கேட்கத் தேவைதான் என்ன?

கை தட்டல்

(ஸ்ரீ என். சிதம்பரசுப்ரமண்யன்)

சூரியன் அஸ்தமிக்கத் தவறினாலும், நாங்கள் கடற்கரை போவதென்னமோ தவறுவதில்லை. வழக்கப்படி, நானும், என் நண்பர்கள் இருவரும் கடற்கரைக்குப் போய்ச் சேர்ந்தோம். மணல் மேல் நடந்து கொண்டிருக்கும்போது யாரோ பின்னாலிருந்து கை தட்டிக் கூப்பிட்டார்கள். மூன்று பேரும் உடனே திரும்பிப் பார்த்தோம். எங்களை ஒருவரும் கூப்பிடவில்லை. மணலில் உட்கார்ந்து கொண்டு, சினிமா நோட்டீஸைப் படித்து ரஸித்துக் கொண்டிருந்த ஒருவர், கடலைப் பட்டாணிக்காரனைக் கூப்பிட்டுக் கொண்டிருந்தார் என்பது தெரிய வந்தது.

ஆனால், இந்த கை தட்டலின் தத்வம் என்ன? நாங்கள் மூன்று பேரும் திரும்பிப் பார்ப்பானேன்? எங்களைத்தான் யாரோ கூப்பிடுகிறார்கள் என்று நாங்கள் நினைத்துக் கொள்வானேன்? அது மாதிரியே, அந்தச் சப்தம் கேட்டு, அங்கிருந்த யாவரும், தங்களைத்தான் கூப்பிடுவதாக நினைத்துக்கொள்வானேன்? விஷயம் என்னமோ சிறியது தான். இரண்டு கைகள் போட்ட சப்தத்திற்கு உலகத்திலே எதிரொலி கேட்கிறது.

கடற்கரையில், நான் என்னை யாராவது கூப்பிடுவதாக நினைத்துக்கொள்ளலாம். எனக்குத் தெரிந்த அநேக நண்பர்கள் தினசரி அங்கு வருகிறார்கள். ஆனால், எனக்கு அறிமுகமில்லாத ஒரு புது ஊரில் நான் போய்க்கொண்டிருக்கையில், யாராவது கை தட்டிக் கூப்பிட்டாலும், நான் அப்பொழுதும் திரும்பிப் பார்ப்பேன் என்பதில் சிறிதேனும் சந்தேகமில்லை.

பூமி சுற்றிக்கொண்டிருக்கிறதே, அது சூரியனைச் சுற்றி வருவது என்னமோ, விஞ்ஞானிகளுக்குத்தான் தெரியும். ஆனால், என்னைத்தான் சுற்றி வருகிறதென்பது நிச்சயமாய் எனக்குத் தெரியும். நான் ஒரு கக்ஷி; உலகம் பூராவும் மற்றொரு கக்ஷி. நான் என்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பதில் ஆச்சர்யமில்லை. ஆனால், இந்த உலகமும் அண்ட சராசரங்களும் என்னையே கவனித்துக் கொண்டிருப்பதாக நினைக்கிறேனே, அதுதான் ஆச்சர்யம். சிருஷ்டியின் நாடகத்தில், நான் தான் நடிகராகவும், மற்றெல்லோரும் சபையோராகவும், நினைத்துக் கொள்வானேன்!

கலாசாலை மாணவர்கள் வெளிக்கிளம்பும்போது, எதற்காக இப்படி அலங்கரித்துக் கொள்கிறார்கள்? கிராப்பு வாரிக்கொள்வதற்கு அரை மணி நேரம்' டை கட்டிக்கொள்வதில் அரை மணி நேரம்; சட்டை சிராய் இவைகள் அணிவதற்கு ஒரு மணி நேரம். தெருவில் போகும்போது கண்களெல்லாம் இவர்கள் மேல் விழுவதாகத்தான் இவர்கள் நினைக்கிறார்கள். இவர்களை ஒருவராவது கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை; இவர்கள் மணிக்கணக்காகச் சிரமப்பட்டுச் செய்து கொண்ட அலங்காரங்களை ஒருவராவது சீண்டவில்லை யென்பது தெரிந்தால் இப்படி நேரத்தைச் சிலவழிப்பார்களா?

கொஞ்ச நாளைக்கு முன்பு, எனக்கு முகத்தில் ஒரு சிரங்கு புறப்பட்டது. அந்த சிரங்கின் வேதனையை விட, முகத்திலேற்பட்ட விகாரத்தைப் பிறர் பார்த்து விடுவார்களே, என்று என் மனம் பட்ட வேதனைதான் நூறு மடங்கு அதிகமா யிருந்தது. யாராவது பேசிக்கொண்டால், என் முகத்திலேற்பட்ட விகாரத்தைப் பற்றித்தான் பேசுகிறார்களோ என்று என் மனம் நடுங்கும். உலகத்திற்கு வேறு வேலையில்லையா? உன்னைத் தவிர வேறு விஷயங்கள் இருக்கின்றன உலகத்திற்கு முன்பாக, என்று சமாதானம் பிறகு செய்து கொண்டேன்.

என் சிந்தனையில், என்னைத் தவிர வேறொன்றுக்கும் இடமில்லாமல் போகும்போது தான் சங்கடங்கள் வந்து

சேருகின்றன. என் சம்பந்தப்பட்ட சில விஷயங்களில் நான் சிரத்தை காட்டலாம். அகம்பாவத்தையே மேன்மையானதாகக் கூடச் செய்து விடலாம். என்னோடு நின்று விடாமல், என் வீடு, என் ஊர், என் தேசம், என் பாஷை, என் மதம் என்பவைகளில் அபிமானத்தை வளர்த்து விருத்தி செய்யலாம். ஆனால், வேறு தேசங்கள் இருக்கின்றன. வேறு பாஷைகள் இருக்கின்றன. வேறு மதங்கள் இருக்கின்றன என்பதை மறக்காமலிருக்க வேண்டும்.

நான் வளரும்போது, "நான்" குறைகிறேன். இலக்கியம், கலை, மதம் இவைகளெல்லாம் 'உன்னைப் போலத்தான் மற்றவர்கள் இருக்கிறார்களெ'ன்றோ, 'மற்றவர்களைப் போலத்தான் நீ யிருக்கிறாய்' என்றோ மனித சமூகத்தின் வேற்றுமையில்லாத தன்மையை, அழுத்திச் சொல்லி ஜீவ வர்க்கத்தைப் பிணைக்கப் பார்க்கிறது. குறுகிய எண்ணங்கள் குறைந்து, மனது விசாலமடைகிறது.

நம் கக்ஷியைப் பற்றி நமக்கு நன்கு தெரியும். நம்முடைய வாதம் நமக்குத் தெரியும். நம் தேவை நமக்குத் தெரியும். இலக்கியமும், கலையும், மற்றொரு கக்ஷியையும், மற்றொரு வாதத்தையும், மற்றவர் தேவையையும் நமக்கு விளக்கிக் காட்டுகின்றன. பூனை கண்ணை மூடிக்கொண்டவுடன் அஸ்தமித்து விடும் என்று நினைத்துவிடுமாம்! அதே போல், நாம் சொல்வது தான் சரி; நாம் செய்வது தான் சரி என்று நினைத்துக் கொண்டிருப்போமானால், எவ்வளவு தான் நாம் அவைகளை உண்மையாகவும், சிரத்தையோடும், பக்தியோடும் செய்தாலும், அது ஒரு வழியைக் காட்டுமே ஒழிய, வேறு வழி கிடையாதென்பது ஆகாது.

ஜனநாயகத்தின் பலம், அந்த ஆட்சியின் கீழ், பல கட்சிகளுக்கு இடமுண்டு. பல அபிப்பிராயங்களுக்கு இடமுண்டு என்பதில் தான் இருக்கின்றது. அபிப்ராய பேதத்தில் தான் அறிவு வளர்கிறது. உண்மை வெளிப்படுகிறது, எதிரியின் வாதத்தைப் பொறுமையுடன் கேட்பவன் தான் பெரிய காரியத்தைச் சாதிக்க முடிகிறது.

இந்த "நான்" என்ற எண்ணம், நம் சிந்தனைகள், நம் உணர்ச்சிகள், நம் அபிமானம், நம் செயல்கள், எல்லாவற்றிலும் புகுந்துகொண்டு நம் பார்வையை மறைக்கிறது. அதற்காகவே, அந்த "நான்" தொலைய வேண்டும் என்று நம் பெரியோர்கள் உபதேசித்திருக்கிறார்கள்.

குருவிடம் உபதேசம் பெற சிஷ்யன் வந்தான். குருவின் வீட்டுக் கதவைத் தட்டினான். குரு "யார்?" என்று கேட்டார். "நான் தான்" என்று சிஷ்யன் பதில் சொன்னான். "நான் போகவிட்டு வா" என்று பதிலளித்து அனுப்பிவிட்டார் குரு.

"நான்" போவது சுலபமான காரியமில்லை. "உன்னை அறிந்து கொள்" என்கிறது தத்துவம். என்னை அறியுமுன் 'என்னை' மறக்கவேண்டும். இரண்டும் ஒன்று தானே?

ஆசிரியர் அறிக்கை

முக்கியமாக கிராமப் புனருத்தாரணத்தைப் பற்றியும், பொதுவாக ஸ்தல ஸ்தாபன, ரோட்டு, ரயில் சௌகரியா சௌகரியங்களைப் பற்றியும், நேயர்கள் தங்களுக்குத் தோன்றும் ஆலோசனைகளை நமக்குச் சுருக்கமாக எழுதி அனுப்புமாறு கோருகிறோம். அந்த யோசனை நமது சமூக வாழ்வின் எந்த அம்சத்தைக் குறித்தாகிலும் இருக்கலாம்; தனி நபரைக் குறித்துமட்டும் இருக்கக் கூடாது.

ஆசிரியர்

சுகாதாரம்

குமாஸ்தா முத்துசாமி அய்யர்

(டாக்டர் டி. எஸ். ரமணி)

காலை வேலைகளை முடித்துக்கொண்டு 'டிஸ்பென்ஸரி' வந்து சேர்ந்தேன். குமாஸ்தா முத்துசாமி அய்யர் என் வரவை எதிர்பார்த்துக்கொண்டு நின்றார். தான் வந்த காரியத்தைச் சொன்னார். சாப்பாடு பிடிக்கவில்லை. உடம்பு அடிக்கடி ஓய்ந்து போகிறது, எந்த வேலையையும் ஊன்றிச் செய்யமுடியவில்லை.

இதற்காக அவர் உடம்பை ஒரு டாக்டரிடம் காட்டினாராம். அவர் டானிக் ஒன்று எழுதிக் கொடுத்தார். ஆரஞ்சுப் பழம், டொமடோ, காபேஜ் முதலியவை ஜாஸ்தியாக தினசரி ஆகாரத்தோடு சேர்த்துக்கொண்டு வரச் சொன்னார். அப்படிச் செய்ததிலும் ஜாஸ்தி குணப்படவில்லை. இந்த ஸ்திதியில் என்னிடம் மருந்து சாப்பிட வந்திருப்பதாகத் தெரிவித்தார். முதலில் சாவதானமாக உட்காரச்சொல்லி அவருடைய பூர்ண விருத்தாந்தத்தையும் கேட்டேன். அவரிடம் பேசிக்கொண்டிருந்ததிலும் அவரை பரிசோதித்த பிறகும் அடியில் கண்ட குறிப்புகளை எழுதலானேன். வாசகர்களே, எங்கேயாவது உங்களைப்பற்றி எழுதிவிட்டேன் என்று என்னிடம் கோபம் கொள்ளாதீர்கள்.

முத்துசாமி அய்யருக்கு வயது 38. மாநிறம். நடுத்தரமான சரீரம். கவர்மண்டு ஆபீஸில் குமஸ்தா. மாதம் ரூ 45 சம்பளம். மூன்று பெண்களையும் ஒரு பிள்ளையையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அவருடையது. வேலையில் பனிரண்டு வருஷம் ஸர்வீஸ். சமீபத்தில் தான் வேலையும் காயம் ஆகி யிருக்கிறது.

பிறகு அவருடைய தினசரி வேலையைப் பற்றி விசாரித்தேன். அதன் முக்கிய குறிப்புகள்.

காலை 7 மணி. சம்சாரம் எழுப்பப் படுக்கையை விட்டு எழுந்திருப்பார். உடம்பு ஓய்ச்சலாக இருந்தால் எரிந்து விழுவதும் உண்டு. இதை அந்த அம்மாள் பொறுத்துக்கொள்ள வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை.

காலை 7-15. பல் தேய்த்து வெறும் காப்பி ஒரு மூக்கால். பட்டணத்துப் பால் கிராக்கியிலும், நாற்பத்தைந்து ரூபாய் சம்பளத்திலும், நாலு குழந்தைகளுக்கு நடுவில் இது கிடைப்பதற்கே ஆண்டவனுக்குத் தேங்காய் உடைக்கவேண்டும்.

காலை 7-30—8. மார்க்கட்டிற்குப் போய் கரிகாய் வாங்கவேண்டும். சில நாளைக்கு மளிகை சாமானும் வாங்கப்போக வேண்டும்.

காலை 8-15—9-15. வீட்டிற்குச் சுமந்துகொண்டு வந்த ஆபீஸ் வேலையைப் பார்க்கவேண்டியது. நடுவில் கடைசிக் குழந்தை ஏதாவது ஒரு பேபரைக் கசக்கினால் முத்துசாமி அய்யர் போடும் சத்தம் மூன்று வீட்டிற்குக் கேட்கும். இதன் பலன் தலைவலியும், அமிர்தாஞ்சன முதலாளிக்கு ஒரு டப்பி விற்பனையும்.

காலை 9-30—9-45. பம்புக் குழாயின் கீழ் ஸ்னானம். சில சமயம் அரை அண்டா வென்னீர்.

காலை 9-50—10. ஆபீஸ் போக வேண்டும் என்ற வேகத்தில் சாப்பாடு.

காலை 10—05. சட்டைபோட்டுக் கொண்டு ஆபீஸ் பேபரை எடுத்துக் கொண்டு புறப்படுதல்.

பகல் 10-5. மோட்டார் ஸ்டாண்டுக்கு எதிர் வெயிலில் நடை. சில சமயம் ஓடவும் வேண்டியிருக்கும்.

பகல் 10-50—1-15. ஆபீஸ் வேலை.

பகல் 1-30—2-15. டிபன். சம்பளம் வந்த நாலு, ஐந்து நாளைக்கு கிளப்பில். பிறகு காலை 8 மணிக்கு வீட்டில் செய்த தோசை. அல்லது ஏதாவது பலகாரம்

பிற்பகல் 2-15—5-45. ஆபீஸ் வேலை

மாலை 6—8. சில சமயம் பஸ்ஸில் வீடு வந்துவிடுவார். வீட்டில் ஏதாவது, செய்து வைத்திருக்கும் பலகாரமும், காப்பியும் சாப்பிடுவார். உடனே பீச்சுக்குப் போய் ஆனந்தமாக மணலில் உட்கார்ந்து விடுவார்.

இரவு 8—30. ராத்திரி சாப்பாடு.

இரவு 8-45—10-50. வீட்டிற்குக் கொண்டுவந்த ஆபீஸ் வேலை திரும்பவும் பிடித்துக் கொள்ளும். பிறகு நித்திரை.

இந்த தினசரிச் சம்பவங்களில் ஒருவித மாறுதலும் அநேகமாக இருக்காது. காலையிலும் யாராவது ஸ்நேகிதர்களைப் பார்க்கப் போனால் ராத்திரி இன்னும் ஒரு மணி ஜாஸ்தியாக ஆபீஸ் வேலை பார்க்க வேண்டி வரும். ஞாயிற்றுக் கிழமையில் சாயங்திரம் முதல் ஆட்டத்திற்கு சினிமாப் போவார். இதே பிரகாரம் சென்ற 12 வருஷம் வேலை பார்த்த பலன், நான்கு குழந்தைகள், ஆகாரம் வேண்டாத உபத்திரவம், ஆயிரம் ரூபாய்க்கு இன்ஷியூரன்ஸ் பாலிஸி நான்கு வருஷம் கட்டி, 'பெயிடப்' செய்தது, இவைதான். அடுத்த வருஷம் மூத்த பெண்ணுக்குக் கலியாணம் பண்ணும் யோசனையானது இப்போதே முத்துஸாமி அய்யர் நித்திரையையும் வெருட்டி விட்டது.

நண்பர்களே, வியாதியைத் தடுத்துக் கொள்ள ஆயிரம் எழுதினாலும் என்ன பயன்? செய்கையில் அல்லவா வேண்டும்? முத்துசாமி அய்யருக்கு நான் ஒரு மருந்தும் கொடுக்கவில்லை. காலையிலும், மாலையிலும் இரண்டு மைல் நடக்க வேண்டும் என்றும், சாப்பிட்டவுடன் அரைமணி ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், ஆபீஸ் வேலையைக் கையில் மட்டுமல்ல, மனதிலும் கூட, வீட்டிற்குக் கொண்டுவரக் கூடாது என்றும் கட்டளையிட்டிருக்கிறேன். கட்டாயம் ஒரு மாதத்தில் அவர் வியாதி குணம் அடையும் என்று உறுதி கூறியிருக்கிறேன்.

வியாதியைத் தடுத்துக்கொள்ள ஏற்பாடுகள் செய்ய நம் நாட்டில் இடையூறுகள் பல இருக்கின்றன. முதல் முதல் படிப்பு இல்லாமை. இரண்டாவது மூடநம்பிக்கை. இதற்குமேல் நம் மக்களின் தரித்திரத்தன்மை. எந்த விதமான காரியத்திற்கும் பண உதவி வேண்டும். இதெல்லாம் தவிர, நம் நாட்டில் முத்துசாமி அய்யரைப் போலுள்ளவர்கள் சுகாதார முறையில் வாழாமல் வியாதிகளைத் தாமே வரவழைத்துக் கொள்வது மிகவும் வருந்தத்தக்கதாயிருக்கிறது.

நடுத்தர அந்தஸ்திலிருக்கும் ஆயிரம் முத்துசாமி அய்யர்கள், இந்த மாதிரி தேகத்திலும் மனதிலும் பூர்ண வலிவு இல்லாமல் காலம் தள்ளுவதைக் காணலாம். நடுத்தர அந்தஸ்து என்று குறிப்பிடும்போது மாதம் ரூ. 35 முதல் ரூ. 150 வரையில் சம்பளம் வாங்குகிறவர்களையும், ரூ. 2000 முதற்கொண்டு ரூ. 10000 வரையில் பூஸ்திதியோ அல்லது தொழிலோ உள்ளவர்களையும் குறிப்பிடுகிறேன். தங்கள் சாதாரணப் படிப்பினாலும், தங்கள் நடவடிக்கையினாலும் கீழ் ஸ்திதியிலிருப்பவர்களுக்கு வழிகாட்ட முடியும். தங்கள் தொழில் அனுபவத்தால் பணக்கார முதலாளிகளின் மூலம் தேசத்தின் தொழிலை அபிவிருத்தி செய்ய உதவலாம். ஆதலால் தங்கள் வாழ்க்கையைச் சுகாதார முறையில் சீர்திருத்தி வாழ்ந்தால், பூர்ண ஆயுளைப் பெறுவதல்லாமல் நம் நாட்டின் செல்வ அபிவிருத்திக்கு அடி கோலினவர்கள் ஆவார்கள்.

ஸர் சி. வி. ராமன் ஒளி

[ஸ்ரீ. ஆர். கே. விஸ்வநாதன் பீ. ஏ. (ஆனர்ஸ்), அண்ணுமலை சர்வகலாசாலை]

ஒளி என்னும் சொல்லை இரண்டு விதமான பொருள்களில் வழங்குவதுண்டு. ஒன்று கண்ணிலே உண்டாகும் புலன் உணர்ச்சி. மற்ருென்று புலனுக்கு விஷயமாகிய பொருள். பௌதிக வியலில் பெரும்பாலும் இந்த இரண்டாவது அர்த்தமே கையாளப் பட்டு வருகின்றது. ஒரு பொருளிலிருந்து புறப்பட்டு வரும் ஒளி நமது கண்ணிலே படும்போது அப்பொருள் நமது கண்ணுக்குப் புலனுகிறது என்று சொல்லுகிறோம். பொருள்களில் சிலவற்றை சுயம்பிரகாசமான பொருள்கள் என்றும் மற்றதை சுயம்பிரகாசமில்லாத பொருள்களென்றும் கூறுவது வழக்கம். அதன் கருத்து என்னவெனில், சுயம் பிரகாசமான பொருள்கள் தாமே வெளியிடும் ஒளியினுல் புலப்படுகின்றன; மற்றப் பொருள்கள் அவைகளின் மீது விழும் ஒளியைச் சிதறச் செய்து அவ்வாறு சிதறிய ஒளி நமது கண்ணிலே படுவதால் நமக்குப் புலனுகின்றன என்பதுதான். சூரியனிடமிருந்து வெப்பம், வெளிச்சம் ஆகிய இரண்டையும் நாம் பெறுகிறோம்: இவையிரண்டும் கிரணங்களாகவே நம்மை வந்தடைகின்றன. இந்தக் கிரணங்களெல்லாம் பிரபஞ்ச மெங்கும் வியாபித்திருக்கும் (Ether) விசும்பிலேற்படும் அலைகள் என்று சொல்லுவார்கள்.

குளத்திலே ஒரு கல்லை விட்டெறிந்தால் அது விழுந்த இடத்திலிருந்து அலைகள் தோன்றி நீர்ப்பரப்பு முழுவதும் பரவுகின்றதை எல்லோரும் பார்த்திருக்கலாம். சிறிது நேரத்திலே இவை அடங்கி விடுகின்றன. ஆனுல், ஒரு குச்சியைத் தண்ணீரில் முழுக்கி அதை ஆட்டிக்கொண்டே இருந்தால் அலைகள் விடாமல் உண்டாகிப் பரவிக் கொண்டிருப்பதைக் காணலாம். தண்ணீர்ப் பரப்பின் மீது ஒரு சிறு நெட்டித்துண்டை மிதக்கவிட்டால் அதனடியில் அலைகள் செல்லும்போது அத்துண்டு மேலுங்கீழுமாக ஆடுவதைக் காணலாம். ஆனுல் அது தன்னிடத்தை விட்டுச் சிறிதும் நகர்ந்து செல்லுவதில்லை யென்பதையும் பார்க்கலாம். இதனுல் ஒரு உண்மை வெளிப்படுகிறது. அதாவது அலைகள் நாற்புறமும் பரவிச் சென்ருலும் தண்ணீர் அவ்வாறு பரவி ஓடுகிறதில்லை. தவிர ஒவ்வொரு நீர்த் துளியும் தானிருக்கும் இடத்திலேயே நின்றுகொண்டு மேலுங் கீழுமாக மட்டுமே ஆடுகிறது. ஒவ்வொரு துளியும் ஒரு ஸகிண்டிலே இயற்றும் துடிப்புகளின் எண்ணிக்கை அந்த அலையின் (Frequency) அடுக்கம் என்று சொல்லுவார்கள். நீர்ப்பரவையில் ஒரே மாதிரியாகத் துடிக்கும் இரண்டு அடுத்தடுத்துள்ள துளிகளிடைப்பட்ட தூரத்தை அலையின் நீளம் என்று கொள்ளுவார்கள்.

மேற் கூறிய நீர் அலைகளைப்போல ஒளிக்கிரணங்களெல்லாம் விசும்பில் ஏற்பட்ட அலைகள் என்றும், இவ்வலைகள் மின்காந்த இயல்பு வாய்ந்தன வென்றும் காட்டப்பட்டன. தவிர, வெப்ப அலைகள், (Radio Waves) வானக அலைகள், × — கிரணங்கள் எல்லாம் ஒளி அலைகளைப்போல மின் காந்த அலைகளே என்றும், அவைகளுக்குள்ள வேற்றுமை "அலைநீளத்தி"லேற்பட்ட வேற்றுமையே ஒழிய வேறில்லை என்றும் அறியப்பட்டது. இம் மின்காந்த அலைகள் மாருத ஒரே வேகத்தோடு செல்லுகின்றன. இந்த வேகம் ஒரு ஸகிண்டிற்கு 1,86,000 மைல் ஆகும்.

சூரிய வெளிச்சத்திலே இருக்கும் ஒரு பொருளை முப்பட்டைக் கண்ணுடி வழியாகப் பார்த்தால் அப்பொருளின் விளிம்புகளிலே பல வர்ணங்கள் தோன்றுவதைப் பார்க்கலாம். இதிலே தோன்றும் நிறங்களின் வரிசை வானவில்லில் உள்ளதைப் போலிருக்கும். ஒரு இருண்ட அறையினுள்ளே ஒரு சிறு துவாரத்தின் வழியாகச் சூரியனது ஒளியைப் புகச்செய்து அந்த ஒளிக்கற்றையின் வழியிலே ஒரு முப்பட்டையையும், அதன்பின் ஒரு

திரையையும் வைத்து, நியூட்டன் என்னும் பேரறிஞர் திரையின் மீது பல வேறு நிறங்களைக் கொண்டதொரு நீண்ட (Spectrum) ஒலிப்பட்டையை முதன் முதலில் அடைந்து காட்டினர். இப்பட்டையின் ஒரு முனை செந்நிறமும், மற்ருெரு முனை ஊதாநிறமும், இவற்றினிடையே ஆரஞ்சு, மஞ்சள், பச்சை, நீலம், அவுரி முதலிய பலவேறு நிறங்களும் தோன்றுவதைக் கண்டுணர்ந்தார். அதாவது வெண்ணிறமான சாமானிய ஒளி பலவேறு நிறங்களைக் கொண்ட ஒளிகளின் சேர்க்கை என்று காட்டினர். இதிலிருந்து ஊதா முதல் சிகப்பு வரையில் உள்ள ஒளி மட்டுமே நம்முடைய கண்ணுக்குப் புலனுகிறது என்று அறிகின்ருேம். இந்த இரண்டிற்கு முள்ள ஒவ்வொரு ஒளிக்கும் அதற்குத்தகுந்த "அலைநீளம்" ஒன்றுண்டு என்று அறியலாம்.

சூரியன் உதயமாகும் போதும், அஸ்தமனமாகும் போதும் செந்நிறமாகத் தோன்றுவதை எல்லோரும் பார்த்திருப்பார்கள். இதன் காரணம் என்னவெனில் சூரியன் அவ்வாறு தாழ்ந்திருக்கும் பொழுது அதனுடைய கிரணங்கள் பூமிக்குச் சற்று உயரம் வரையில் வியாபித்திருக்கும் (Atmosphere) பவனத்தில் வெகு தூரம் வந்து நம்மை அடைய வேண்டியிருக்கிறது. அதன் பொருட்டு அதலிருந்து வரும் வெண்ணிறமான ஒளி பவனத்திலிருக்கும் துகள்களில் மோதுண்டு சிதறப் படுகின்றது. வெண்ணிறமான ஒளியில் அடங்கியுள்ள எல்லா வர்ண ஒளிகளும் ஒரே அளவாகச் சிதறப்படுவதில்லை. அவைகளில் செந்நிற ஒளியைத் தவிர மற்ற ஒளிகளனைத்தும் நாம் பார்க்கும் திசைக்கு அப்புறமாகச் சிதறப்படுவதால் நமக்குச் சூரியனுடைய பிம்பம் செந்நிறமாகத் தோன்றுகிறது என்று அறியப்பட்டது. கடல் நீரும், ஆகாயமும் நீலநிறமாகத் தோன்றுவதும் இதே காரணம் பற்றித்தான். இது சம்பந்தமாக ஸர். ஸி. வி. ராமன் கல்கத்தாவிலிருக்கும் பொழுது அவருடைய (Laboratory) ஆய்வு சாலையில் சில வருஷங்கள் ஆராய்ச்சிகள் நடத்தி வந்தார். அவ்வாறு செய்து கொண்டு வருகையில் 1928-ஆம் வருஷத்தில் ஒரு அதிசயத்தைக் கண்டுபிடித்தார். அது பற்றி அவருடைய புகழ் உலக முழுதும் பரவினதன்றி, நம் நாட்டின் மதிப்பும் அயல் நாடுகளில் வெகுவாக உயர்ந்தது. அவர் அறிவு வளர்ச்சிக்குச் செய்த பேருதவி ஒருபுறமிருக்க, அடிமையாக விருக்கும் நம் நாட்டின் செல்வாக்கை உயர்த்தினதைத் தான் நாம் அதிகம் பாராட்ட வேண்டும்.

ஒளி சில பொருள்களின் வழியாகத்தான் ஊடுருவிச் செல்லக்கூடும். இவை (Transparent) தெளிப் பொருள்கள் எனப்படும். ஒரு தெளிப்பொருளில் மிகப் பிரகாசமுள்ளதும், ஒரே "அலைநீளம்" கொண்டதுமான ஒளிக்கற்றை ஒன்றைப் புக விட்டார். அவ்வாறு ஒளி புகுத்தப்பட்ட அப்பொருளிலிருந்து வரும் ஒளியைப் பரிசோதித்துப் பார்க்கையில் அது வேறு "அலைநீளம்" கொண்டிருப்பதைக் கண்டார். அப்பொருளின் (Molecules) மூலகங்கள் தான் இந்த மாறுதலைச் செய்திருக்க வேண்டுமென்று அறிந்தார். பன்முறை சோதனைகள் நடத்தித் தான் கண்டதை உறுதிப்படுத்திக் கொண்டார். அவர் 1928-ம் வருஷம் மார்ச் மாதம் 16-ம் தேதியன்று பங்களூரில் "தென்னிந்திய ஸயன்ஸ் அஸோஸியேஷன்" மேடையில் பேசும்பொழுது இதை வெளியிட்டார். உடனே இச்செய்தி எங்கும் பரவிற்று. அமெரிக்கா நாட்டிலுள்ள பிரபல விஞ்ஞானியான "ஆர். டபிளியூ. வுட்" என்பவர் முதன் முதலில் ராமன் கண்டுபிடித்ததைப் பரிசோதித்து அது சரியென்று உலகத்துக்கு நிரூபித்துக் காட்டினர்.

இவ்வாறு தெளிப் பொருளினல் உண்டு பண்ணப்பட்ட ஒளி, அப்பொருளைச் சார்ந்திருக்கிறதென்றும், எல்லாப் பொருள்களும் தத்தமக்குரிய ஒளியை உண்டுபண்ணுவதாகவும் அறியப்பட்டது. அதாவது இந்தப் புதிய ஒளி பொருள்களின் அறிகுறியாக இருப்பது தெரியலாயிற்று. அத்தகைய ஒளியை இவர் கண்டு பிடித்ததின் பொருட்டு அதற்கு "ராமன் ஒளி" என்று பெயரிடப் பட்டிருக்கிறது. அதற்காக அவருக்கு நோபல் பரிசும் தரப்பட்டது. பதார்த்தங்களின் மூலகங்களைப் பற்றிய விஷயங்களை அறிவதற்கு இவர் கண்டுபிடித்த ஒளி பெரிதும் பயன்பட்டு வருகின்றது.



தொழில் பாங்கிகள்

பாங்கிகளை முக்கியமாக மத்ய பாங்கிகள், கமர்ஷியல் பாங்கிகள், சுதேச பாங்கிகள், தொழிற் பாங்கிகள் கிராமபாங்கிகள் என்று ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம். தொழிற் பாங்கிகள் போதுமான அளவு இந்தியாவில் விருத்தியாகவில்லை,

ஒரு அகில இந்திய தொழிற் பாங்கி சமஷ்டி முறையில் தயாரிக்கப்பட வேண்டும். அந்த பாங்கியின் கீழ் ஒவ்வொரு மாகாணத்திலும் தொழில் கார்ப்பொரேஷன்கள் இருக்கவேண்டும். அந்த பாங்கியின் போர்டில் மாகாணத்துப் பிரதிநிதிகளும் பாங்கியிலுள்ள நிபுணர்களும் இடம் பெற்று அந்த சபை 'நாட்டின் தொழிலுக்கு மூலை ஸ்தான'மாக இருக்க வேண்டும்.

தற்காலத்தில் மானேஜிங் ஏஜன்ஸி திட்டம் அகன்று வருவதால் இப்படிப்பட்ட தொழிற் பாங்கு மிகவும் உபயோகமானது. மாகாணங்களிலுள்ள தொழில் மந்திரிகள் இந்த பொருளாதாரத் திட்டத்தை நிறைவேற்றி சமஷ்டியின் கீழுள்ள கார்ப்பொரேஷன்களுக்கு உதவி அளிப்பார்கள். இந்த தொழிற் பாங்கி புதுத் தொழில்களுக்கு ஒத்தாசை செய்வதல்லாமல் தற்போதுள்ள தொழில்களுக்கும் உதவியாக இருக்கும்.

ஒவ்வொரு பத்துக் கிராமங்களுக்கும் ஒரு கோவாப்ரேடிவ் பாங்கு இருக்க வேண்டும். அவைகளை மாகாண மத்ய கோவாப்ரேடிவ் பாங்குடன் பிணைத்து விடலாம்.

கமர்ஷியல் பாங்குகள் சம்பந்தப்பட்ட வரை, ஒரு இந்திய பாங்கும் அயல்நாட்டு எக்சேன்ஜ் சௌகர்யம் செய்துகொடுக்கத் தயாராயில்லை. உலகம் முற்றிலும் கிளைகள் உள்ள சக்தி வாய்ந்த இந்திய பாங்கி இன்றியமையாதது. அதிர்ஷ்ட வசமாக உள்நாட்டு வியாபாரம் சம்பந்தப்பட்ட வரை இந்தியாவில் பழைய 'ஷராபி' முறை இருக்கிறது. இந்தியாவில் பாங்கிகள் முன்னேற வேண்டுமானால் ஒரு 'பில் மார்க்கட்' அவசியம் வேண்டும்.

பாங்கிகள் கடன் கொடுக்கும் முறையில் சில மாறுதல்கள் ஏற்படவேண்டும். பணம் இருப்பவர்களுக்கு மட்டுமே கடன் கொடுப்பதல்லாமல், திறமையும், யோக்கியதையும், திருப்பிக் கொடுக்க மனம் உள்ளவர்களுக்கும் கடன் கொடுக்கலாம். தேசத்தில் சுதேசி பாங்கிங் வலுவாயிருந்த போது, இத்தகைய கடன் வசதிகள் ஏதேஷ்டமாயிருந்தன. ஆனால் தற்காலத்திய பாங்கிங் முறையில் இதற்கு இடமில்லாமல் போய்விட்டது. சுதேசி பாங்கிகளுக்கும் மேல்நாட்டு பாங்கிங் முறைக்கும் சம்பந்தம் உண்டாகவேண்டும்.

—ஸ்ரீ. டிவான்ஜி.

மதுவிலக்கு

நவநாகரீக கனவான்களில் சிலர் இந்த மதுவிலக்குச் சட்டம் சாத்யமானதா என்றும் இதன் மூலம் சர்க்கார் வரும்படியை இழப்பது புத்திசாலித்தனமா என்றும் என்னைக் கேட்கிறார்கள். எப்படி வரவு செலவுத் திட்டத்தைச் சரிக்கட்டுவது என்று கண்டுபிடிப்பது மந்திரிகள் வேலை என்று பதில் சொன்னேன். தேவையானால் அவர்கள் ரத்தத்தைக் கொடுத்து அதை சமாளிப்பார்கள். ஆனால் வரவு செலவைச் சரிக்கட்ட வேண்டுமென்பதற்காக காங்கிரஸின் கொள்கையையும் லட்சி

யத்தையும் விட்டுவிட முடியாது. அமெரிக்க மதுவிலக்கை நான் பார்த்திருக்கிற படியால் அதன் குணகுணங்கள் எனக்குத் தெரியும். இதனால் பணக்காரர்களுக்கு ரொம்ப இடைஞ்சலாக இருந்தால் கூட ஏழைகளுக்கு குறுகிய காலத்திற்குள்ளாகவே சுகத்தைக் கொடுக்கக் கூடியது. ஏழைகளில் கூட சிலர் சாப்பாட்டில் செலவழிக்கும் பணத்தை மதுவில் செலவழித்தால் அதிக சந்தோஷம் கிடைப்பதாகக் கூறலாம். மதுவிலக்கோடுகூட குடிகளின் பொருளாதார நிலைமையை மாற்றியமைப்பதற்கு நாம் முயல வேண்டும். குடிக்குப் பதிலாக அவர்கள் தேகத்திற்கும் மனத்திற்கும் வேண்டிய தேவைகளை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

* * *

ஆலயப்பிரவேச சம்பந்தமாக தனிப்பட்ட நபர்களிடத்தில் மனம் மாறுதலும் முயற்சியும் இருந்தாலொழிய சட்டத்தினால் மட்டும் ஒரு பிரயோஜனமும் இல்லை; அது கேலிக்கூத்தாய் போய்விடும்; அது கொடுமைகூட.

* * *

நாம் எல்லோரும் சரிநிகர் சமமாக இருந்து எல்லா வகுப்பாருக்கும் சமமான சேவை செய்யவேண்டும். பிறர் நம்மிடம் எப்படி நடந்து கொள்ளுகிறார்கள் என்பதைக் கவனிக்கவேண்டாம். நமக்கு வேண்டியது சுதந்திரம்; சுதந்திரம்; இன்னும் சுதந்திரம். அது ஒரு வகுப்பைப்பற்றின விஷயமல்ல. ஹிமவத் பர்வதத்தின் சிகரங்கள் ஏற்றத் தாழ்வாயிருந்தாலும் பொதுவான பூமியிலிருந்துதானே எழும்பி நிற்கின்றன? அதுபோல் நாம் எல்லோரும் ஒரே நிலையின் நின்று அதற்குப் பிறகு ஒவ்வொருவர் திறமையையும், உழைப்பையும், தைரியத்தையும் ஒட்டி முன்னேறி மலைச் சிகரத்தைப்போல் உயர்ந்து விளங்குவோமாக! ஹிமயத்தைப்போல் நாம் உயர்ந்த பின்னர், வெளிதேசத்தார் நம்மைப் பார்த்து "இது என்ன ஆச்சர்யம்! பூமியிலிருந்து சிறிதாக எழுந்த குன்றிலிருந்து இவ்வளவு பெரிதாக ஆன சிகரங்களை ஒன்று சேர்த்துப் பார்க்கும்போது அவை இந்தியாவின் ஹிருதயத்தில் வாழும் ஒரு தேசத்தாரின் பெருமையைக் குறிப்பிட்டல்லவா நிற்கிறது!" என்று கூறி ஆச்சர்யப்படுவார்கள்.

—ஸ்ரீமதி. ஸரோஜினி நாயுடு

பிரிட்டன் என்ன செய்தது?

கல்வி விஷயத்தில் இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாட்சி அவ்வளவு சிலாக்கியமானதாக இருக்கிறது என்று சொல்லமுடியாது. ஆரம்பக்கல்விக்கு நல்ல அடிப்படை ஏற்படுத்தாமல் மேல்தரப் படிப்பிற்குப் பிரமாதமான விரிவு கொடுத்து விட்டது தான் பிசகாய்ப் போய்விட்டது. ஒரு விவசாயக் கல்லூரி ஏற்படுவதற்குமுன் ஆறு சர்வ கலாசாலைகள் ஏற்பட்டுவிட்டன. ஒரு அமெரிக்க நன்கொடையாளி பணம் கொடுத்திருக்காவிட்டால் அந்த விவசாய ஸ்தாபனம்கூட ஏற்பட்டிருக்குமா என்பது சந்தேகம்.

நாம் இதுவரையில் இந்தியர்களை உயர்தர அரசாங்கப் பதவிகளுக்கு எடுக்காதது பிசகு என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். முன்பே நாம் அவர்களை நல்ல பதவிகள் கொடுத்து அரசாங்கத்தில் சேர்த்துக் கொண்டிருந்தோமானால் நாம் அரசியல் சீர்திருத்தங்கள் கொண்டுவரும்போது இவ்வளவு மனக் கசப்பும் சந்தேக புத்தியும் இருக்காது.

—லார்டு ஹேய்லி (முன்னர் மால்காம் ஹேய்லி)

யுத்தம் வந்தால்

யுத்தம் ஏற்படுவதைப்பற்றி யோசிக்கும் பொழுது ஜெர்மன் அதிகாரிகள் நம்முடைய ஆயுத பலத்தைப் பற்றி மட்டும் எண்ணமாட்டார்கள்; ஒரு நீண்ட யுத்தத்தையும் சமாளிக்கக் கூடிய நமது நிதி பலத்தைப் பற்றியும் கூடத்தான் கட்டாயம் யோசிப்பார்கள்.

இதை நாம் எப்பொழுதும் மறக்கவில்லை. உலக சமாதானத்திற்கும் இது ஒரு முக்கியமான காரணமாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

ஸ்ரீ சேம்பர்லேன்



வெல்லிங்டனில் காண்பிக்கப்படும் வாலிபர் சங்கத்தில் ஓர் காட்சி

வாலிபர் சங்கம்

யுவர்களும் யுவதிகளும் சேர்ந்து ஒரு சங்கம் ஏற்படுத்தினார்கள். அந்த சங்கத்தில் சேர்ந்தவர்களெல்லாம் காதல் மணத்தை லக்ஷியமாகக் கொள்ளவேண்டும். கல்யாணம் பண்ணிக்கொண்டு அதற்கப்புறம் காதல் இல்லையே என்று சதிபதிகள் கட்டிக்கொண்டு அழக் கூடாது என்பது இவர்கள் சித்தாந்தம். ஆணுக்கும் பெண்ணுக்கும் காதல் ஏற்பட்டு அந்தப் பிரவாகத்தில் விழுந்து பரிதவித்த பிறகு கலியாணம் பண்ணிக்கொண்டு சிரிப்பாய் சிரிக்க வேண்டும் என்பது அவர்கள் கொள்கை. இது நல்ல லக்ஷியம் தான். ஆனால் சங்கத்தார் ஒரு அசட்டுத்தனத்தையும் செய்து விட்டார்கள். அது என்னவென்றால், பெற்றோர்கள் நியமனம் செய்தபடி. கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது என்று சங்க விதியின் ஒரு ஷரத்தைப் போட்டு விட்டார்கள். இந்த விதியால் எவ்வளவு கஷ்டங்கள் உண்டாகின்றன? அந்த விதி தலைவர் பேரிலே விழுவதாயிருந்தால் தலைவிதி தானே? தலைவர் சுந்தரம் காரியதரிசி கமலாவைக் காதலிக்கிறார். சரி! காதல் உண்டாகி விட்டது. கல்யாணம் செய்து கொள்ளலாமென்றால் அந்த ஷரத்து குறுக்கே வந்துவிட்டது. ஆம்; இருவர் பெற்றோர்களும் ஏற்கனவே கலியாணத்தை நிச்சயித்து விட்டார்கள். அப்படியிருக்கும்போது இருவரும் கலியாணம் செய்து கொள்ளக் கூடாதல்லவா? இந்த சங்கடம் மகா வேடிக்கையாகத் தீர்க்கப்படுகிறது. இந்தக் கிண்டல் படத்தை வெல்லிங்டனில் டிஸம்பர் 24ந் தேதியிலிருந்து காண்பிக்கிறார்கள்.

விமர்சனம் :

யயாதி

யயாதி ராஜனின் அற்புதமான கதையை அதியற்புதமாக மோஹன் மூவிடோன் படம் பிடித்திருக்கிறார்கள். உலக வாழ்வின் சிறுமையையும் சிற்றின்பத்தின் துச்சத்தையும் விளக்கிக் காட்டி பரமார்த்திக நினைவுகளை ஊட்டும் இந்தப் படம் சிறந்த படிப்பினையாகும். கதையை வெட்டி நாசமாக்காமலும் வெறுப்பைக் கொடுக்கும் ஹாஸ்யங்களைப் புகுத்தாமலும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் படத்தில் சுமார் 25 பாட்டுக்கள் இருக்கின்றன. ஆனாலும் அலுப்புத் தோன்றாதபடி மெட்டுக்களை அமைத்திருக்கிறார்கள். 'டெக்னிக்'கில் யயாதி ஹிந்திப்பட அளவிற்கு எட்டியிருக்கிறது. தமிழ் படங்களுக்குப் பொதுவான சில குறைபாடுகள் இதில் இருந்தபோதிலும் டைரக்டர் டாண்டன் கூடுமானவரை பிரயாசைப்பட்டு இவ்வருஷம் ஓர் நல்ல படத்தைக் கொண்டு வந்ததற்காக அவரை நாம் பாராட்ட வேண்டும.